விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii


SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812



பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 25 திங்கட்கிழமை (09.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 080


## இவ்வாரம் 150 லொறிகளில் உணவுப் பொருட்கள்

# யாழ். குடாநாட்டுக்குத் தேவையான பொருட்கள் ஏ-9 பாதையூடாக அனுப்பி வைக்கப்படும்

### வெலிசறையில் களஞ்சியம்; தனியாரும் எடுத்து வரலாம்– திவாரட்ண அறிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிய 150 லொறிகள் யாழ்.–கண்டி வீதி (ஏ-9) வழியாக இந்த வாரம் செல்ல இருப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி.திவாரட்ண தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணா அம்மானின் அணி ஆயுதத்தை கையளிக்காது

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை ஒப்படைத்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை சார்ந்தவர்கள் தமது ஆயுதங்களை தற்போதைக்கு ஒப்படைக்கமாட்டார்கள் என தெரிய வருகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் பின்னணி நிலைகளுக்குள் புலிகளின் சிறப்புப் படையணி ஊடுருவல்!

### 'லக்பிம' வார ஏடு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

நீண்ட நாட்களுக்கு அரச படையினரின் பின்னணி நிலைகளுக்குள் தங்கியிருந்து தாக்குதல்களை மேற்கொள்ளும் நோக்குடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறப்பு பயிற்சி பெற்ற அணிகள் ஊடுருவியுள்ளன என்று கொழும்பில் இருந்து வெளிவரும் லக்பிம ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக லக்பிம வார ஏட்டின் பாதுகாப்பு பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

சுண்டிக்குளம் கடற்கரை பகுதியின் தென் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் தனது காவல் அரணில் இருந்து கடற்கரை பக்கமாக 01.03.2009 ஞாயிறு அன்று நள்ளிரவு சென்றிருந்தார்.

அங்கு சென்றவர் (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை -திருகோணமலைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என யாழ்.இராணுவ சிவில் நிர்வாக அலுவலகர் மேஜர் அருணசிறி அறிவித்துள்ளார். எனவே நேற்று முன்தினம் செல்வதற்கான பயணச்சீட்டை பெற்றவர்கள் இன்றைய பயணிகள் கப்பல் சேவையில் செல்லலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# 'இறுதி நடவடிக்கை' யுத்தம் புதுக்குடியிருப்பில் கடும் சமர்!

(கொழும்பு)

வன்னியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் புதுக்குடியிருப்புப் பிரதேசம் மும்முனைகளினூடாகவும் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கடந்த இரு தினங்களில் இரு தரப்புக்குமிடையில் இடம்பெற்ற மோதல்களின்போது சுமார் 100 விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பலர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பட்டினிக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்; வன்னிக்கு உணவுப் பொருட்களுடன் கப்பல்

வன்னிப் போர் பிரதேசத்தில் சிக்கியுள்ள பொது மக்களுக்கு போதிய உணவுப் பொருட்களையும் மருந்துப்பொருட்களையும் அனுப்பி வைக்குமாறு கோரி நேற்று புதுமாத்தளன் பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்கள் அங்கு சென்றிருந்த சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிகாரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல் தெரிவிக்கின்றன. இதேவேளை வன்னிப் பகுதிக்கு கப்பல் மூலம் நேற்று 500 மெ. தொ. உணவுப்பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அரசு தெரிவித்துள்ளது. (ந-5,14)

## யாழ். மாநகர சபை தேர்தல் விரைவில்?

வடபகுதியை முழுமையாக மீட்ட பின்னர் வடக்கில் தேர்தல்கள் நடத்தப்படும் என அறிவித்திருக்கும் நிலையில் யாழ்.மாநகரசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முனைப்புக்காட்டி வருவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

யாழ்.மாநகர சபைக்கான தேர்தலொன்றை நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் தேர்தல்கள் ஆணையாளரைச் சந்திக்கவிருப்பதாகத் தெரியவருகிறது. 1987ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட இலங்கை–இந்திய (02ஆம் பக்கம் பார்க்க)

# நேற்று முன்தினம் நடந்த எறிகணையில் 66 பேர் பலி; 154 பேர் படுகாயம்

(வவுனியா)

மாத்தளன் மருத்துவமனை மற்றும் இடைக்காடு வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் நடந்த எறிகணைத் தாக்குதல்களில் 66 பேர், கொல்லப்பட்டுள்ளதுடன் 154பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அரசினால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட மாத்தளன் மருத்துவமனை பகுதியில் விழுந்து வெடித்த எறிகணையில் 15 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

சு.கிரிசாந்தன் (வயது 12), சு.சுபிசன் (வயது 5), சு.சுவீதா (வயது 3), ஜெ.ஜெனிஸ்ரா (வயது 7), செ.ஜெயரூபன்(வயது 19), ச.சண்முகம் (வயது 50), ஜெ.ஜென்சிகா (வயது 6), சிதம்பரநாதன் (வயது 56), சரணியா (வயது 3), மிக்கேல்பிள்ளை ஞானேஸ்வரன் (வயது 60), ஞானேஸ்வரன் கமில்ட்ரன் (வயது 20), திருமூர்த்தி பிரதீபன் (வயது 16), நாகமுத்து அருள் நேசயோகநாதன் (வயது 65), ச.விஜயரஞ்சிததாஸ் (வயது 26), அந்தோனி ரேணுகா (வயது 17),

இதேவேளை (02ஆம் பக்கம் பார்க்க)




சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்
unicef


## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மன்மோகனிடம் பதவி; சோனியாவிடம் அதிகாரம்

# ஆட்சிக்கு வந்தால் 100 நாளில் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு

## தேர்தல் பிரசாரத்தில் அத்வானி சபதம்

(சென்னை)

**பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நூறு நாட்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இவ்வாறு பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி தெரிவித்துள்ளார்.**

பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடும் அத்வானி நேற்று முன்தினம் நாகர்கோயிலில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கையிலும் மலேசியாவிலும் தமிழ் மக்கள் இன்று துன்பப்படுவதற்கு மத்திய அரசுதான் காரணம். டில்லியில் தமிழ் மக்களைக் காக்க நடைபெற்ற போராட்டத்தில் நானும் கலந்துகொண்டேன்.

இலங்கையில் வாழும் தமிழர்கள் மற்றும் மலேசியாவில் வாழும் த்மிழர்களைப் பற்றி கவலைப்படும் தமிழக மக்களை நான் பாராட்டுகின்றேன்.


இலங்கையில் உள்ள தமிழர்களின் பரிதாபநிலைக்கு காங்கிரஸ் அரசுதான் காரணம். அவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே தமிழகத்தில் உள்ள மக்கள் இலங்கையில் கொல்லப்படும் தங்கள் சகோதரர்களுக்காகப்படும் வேதனைகளை, கவலைகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

கடந்த பல தேர்தல்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஆட்சிகளை எடைபோட்டு மக்கள் தெளிவான முடிபை எடுத்துள்ளனர்.

இன்று மன்மோகன்சிங்கிடம் பதவி இருக்கிறது. அதிகாரம் இல்லை. ஆனால் சோனியாவிடம் பதவி இல்லை. அதிகாரம் இருக்கிறது.

ரேஸ்கோர்ஸ் ரோட்டில் உள்ள பிரதமர் இல்லம் இன்று அதிகாரம் இல்லாத வீடாக மாறிவிட்டது. ஜவகர்கலால்நேரு, இந்திரா காந்தி, மொரார்ஜிதேசாய், வாஜ்பாய் போன்றவர்கள் பிரதமராக இருந்தபோது இந்த இல்லத்தில் அதிகாரம் இருந்தது. ஆனால் இன்று சோனியா வீட்டில் அதிகாரம் குவிந்து கிடக்கிறது.

பிரதமருக்கு மரியாதை குறைந்துவிட்டது. காங்கிரஸ்காரர்களிடம் பிரதமர் ஒரு காரியத்தை கூறினால் இதற்கு சோனியா ஒப்புதல் தந்துவிட்டாரா என்று கட்சிகாரர்களே கேள்வி கேட்கும் நிலை உள்ளது. எனவேதான் இந்த



தேர்தலில் முடிபெடுக்கும் தகுதியுடைய பிரதமரைத் தெரிவு செய்யுமாறு பா.ஜ.க. கோருகிறது என்றார். (ந-5)

## நேற்று முன்தினம் நடந்த எறிகணையில்...

மாத்தளன், அம்பலவன், பொக்கணை மற்றும் வலைஞர்மடம் பகுதி களில் நேற்று முன்தினம் நடந்த எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 22 பேரின் சடலங்கள் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

பொன்னையா பத்மாவதி (வயது 54), செல்வம் சிவசோதி (வயது 34), ஆறுமுகம் சுரேஸ் (வயது 39), சுரேஸ் தியாகசோதி (வயது 32), சுரேஸ் கஜீதரன்(வயது 18), சுரேஸ் கிருஷாந்தன் (வயது 12), சுரேஸ் சுபீசன் (வயது 5), சுரேஸ் சுபிக்கா (வயது 3), கண்ணையா ரோஸ்மலர் (வயது 36), கண்ணையா அன்பரசி (வயது 10), ஆரோக்கியம் சபரியான் (வயது 70), வேலாயுதம் கிருஷ்ணகுமார் (வயது 31), கந்தசாமி ரமேஸ் (வயது 22), செ.ஜெயரூபன் , இராமையா சண்முகம் (வயது 50),

வீரப்பன் நிஷாந்தி (வயது 10), நாகமுத்து கங்காதரன் (வயது 48), சிவராஜா கலாதீபன் (வயது 13), கருணாகரசிங்கம் புஸ்பராணி (வயது 27), ஜெகதீஸ்வரன் ஜென்சிகா (வயது 7), தங்கவேல் (வயது 70), கதிராசி (வயது72), ஆகியோரின் சடலங்களே மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இதில் 12 வயது சிறுமி ஒருவரின் சடலம் இதுவரை உறவினர்களால் அடையாளம் காணப்படவில்லை. காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு,

மை.திரேசா (வயது 57), விஸ்வமலர் (வயது 27), பரமேஸ்வரன் (வயது 30), தனுசன் (வயது 7), டயானா (வயது 2), சாரதாதேவி (வயது 36), புவனாதேவி (வயது 26), சின்னக்குமார் (வயது 31), சி.பரமேஸ்வரன் (வயது 28), மோ.திவ்வியா (வயது 15), மு.ராஜகுலேந்திரன் (வயது 25), சி.ஆதீபன் (வயது 6), அன்ரனி யேசுதாஸ் (வயது 30), செ.இன்பராணி (வயது 36),

த.நிக்சன் (வயது 33), வே.நிசாந்தினி (வயது 10), மு.சுஜித்திரா (வயது 26), ஆ.பரமாயி (வயது 62), இ.றஜீபன் (வயது 12), இ.கலையரசன் (வயது 7), செ.கோகுலன் (வயது 12), கு.தாசகுமார் (வயது் 15), ச.குணராசா (வயது 52), ச.கதிராசி (வயது 73), ம.மதுசன் (வயது 13), த.தர்மேந்திரன் (வயது 25), சி.சசிக்குமார் (வயது 33), ச.சுபாசினி (வயது 32), பிரியங்கன் (வயது 10), ச.பிரியங்கா (வயது6), சி.பானுவன் (வயது7), கெ.மஞ்சுளா (வயது 30), செ.ஜெகதீஸ்வரி (வயது39), கரிசாலன் (2 வயது), க.துரைராசா (வயது 61),

ர.சறோஜினிதேவி (வயது 36), ர.பிரியங்கன் (வயது 10), பா.தனுசன் (வயது 14), சு.தங்கம்மா (வயது 67), ம.திலகம்மா (வயது 65), ம.சந்திரமோகன் (வயது 46), பொ.மீனாட்சி (வயது 56), ச.நகுலேஸ்வரன் (வயது 49), ந.பரமேஸ்வரி (வயது 55), ப.கமலாதேவி (வயது 58), சி.ராஜன் (வயது 31), க.சுகன்ஜா (வயது 14), பு.கிருஸ்ணகுமாரி (வயது 33), எழில்மதி (06 மாதங்கள்), செ.சிவயோகம் (வயது 60), த.ஜெயதேவி (வயது 28), ந.சரஸ்வதி (வயது 58), க.மீனாட்சிப்பிள்ளை (வயது 88), த.பத்மாவதி (வயது 47), செ.தியாகராசா (வயது 72), சி.செல்வராணி (வயது 53),

ந.புஸ்பராணி (வயது 39), செ.சரண்ஜா (வயது 14), செ.சிதம்பரநாதன் (வயது58), சி.சிவரூபன் (வயது 29), அ.சாந்தாஜினி (வயது 48), சு.மகேஸ்வரன் (வயது42), ஜெ.ஜெனிஸ்ரா (வயது03), சந்திராதேவி (வயது 51), ச.சஞ்சீவன் (வயது 12), ச.ஜெயதீபன் (வயது 10), த.மோகன் (வயது 14), இ.நிதர்சன் (வயது 10), த.ராஜா (வயது 28), ந.செல்வராணி (வயது 59), கி.கிரதீபன் (வயது 16),

சு.லோறன்ஸ் (வயது 16), ப.பிறேமலா (வயது 28), சி.விஜயன் (வயது 23), க.பஞ்சாட்சரம் (வயது 46), ஜெயசீலன் (வயது 32), சீதாலட்சுமி (வயது 44), சி.செபஸ்ரியான் (வயது 29), கி.நிருஜன் (வயது 10), சி.ஜெயலட்சுமி (வயது44), ம.பொன்னபூசனம் (வயது 69), சி.நல்லையா (வயது 66), சி.கலிஸ்ரன் (வயது 13), மிறோஸ்சன் (வயது 16), ம.மதியாபரணம் (வயது 58), ச.ராதிகா (வயது16), வி.திருமலை (வயது 28), அ.சிவகுமார் (வயது 34), ப.பகீர்தன் (வயது 12), ப.பவித்தாராணி (வயது10), சி.முகுந்தன் (வயது 30), செ.முகுந்தன் (வயது 24),

கா.ரங்கநாதன் (வயது 48),ந.மோகதாஸ் (வயது 23), சோ.கோதரசன் (வயது 40), சி.மாலினி (வயது 36), தே.குலேந்திரன் (வயது 28), ம.மயூரன் (வயது 12), ச.சந்திரகுமார் (வயது30), ஜே.சங்கவி (வயது 04), க.சாதுசன் (வயது 14), ஜே.தயாபரன் (வயது 30), த.சுசி (வயது 27), ஆ.நகுலேஸ்வரன் (வயது25), கோ.ஜீவநேசராணி (வயது 29), கு.மதிவதனன் (வயது07), கணேசமூர்த்தி (வயது 57), பெ.சிங்கன் (வயது 37), பே.நிசாந்தினி (வயது 13),கு.மேரிஸ்நாயகி (வயது 45), சா.வசந்தன் (வயது 26), கா.தேவர் (வயது 68), சி.விஜயகுமார் (வயது 33), ப.மங்களசௌந்தரி (வயது 27), சு.ஜெயரட்ணம் (வயது 46),ம.சபாரட்ணம் (வயது 40), 'சு.பிரியதர்சினி (வயது 23),பெ.சூரியகுமார் (வயது 31) ஏனையோரின் பெயர் விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை. (ந-5)

## இந்திய மருத்துவக்குழு இன்று இலங்கை வருகிறது

(கொழும்பு)

மோதல்களினால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக இந்திய மருத்துவக்குழு இன்று இலங்கை வரவுள்ளது.

இலங்கை வரும் இந்திய வைத்திய குழுவினரை திருகோணமலை புல்மோட்டை பகுதியில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நோக்கில் வைத்தியர்கள் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்புவது பற்றி இந்திய வெளிவிவகார அமைச்சு யோசனைத் திட்டம் ஒன்றை கடந்த 24ஆம் திகதி தயாரித்திருந்தது.

இந்த யோசனைத்திட்டம் இம் மாதம் 3 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டு, இந்திய மத்திய அரசாங்கத்தில் விவாதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. இதற்கமைய வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளடங்கலாக 50 பேர் கொண்ட இரண்டு குழுக்கள் இன்று இலங்கை வரவுள்ளன. (ந-5)

## திருமலை வைத்தியசாலையில் இருந்து 95 நோயாளர்கள் மன்னாருக்கு

(திருகோணமலை)

திருகோணமலை வைத்தியசாலையிலிருந்து மேலும் 95 நோயாளர்கள் நேற்று முன்தினம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் இவர்கள் திருகோணமலை வைத்தியசாலையிலிருந்து மன்னார் பொது வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அழைத்து வரப்பட்டவர்களுக்கான உதவிகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இதுவரையில் வன்னியில் இடம் பெற்ற மோதல்கள் காரணமாக 822 பேர் மன்னார் பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக அழைத்து வரப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தமிழர் பகுதியில் இன்னும் ஓராண்டு போர் தொடரும்

### பிரதமர் ரட்ணசிறி ஆரூடம்

(கொழும்பு)

இலங்கையில் தமிழர் பகுதியில் இன்னும் ஓராண்டுக்கு போர் தொடரும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த தேர்தல் பேரணி ஒன்றில் பேசிய பிரதமர் தமிழர் பகுதியில் அடுத்த ஆண்டுதான் (2010ஆம் ஆண்டு) போர் முடிபுக்கு வரும் எனினும் கூடிய விரைவில் போர் முடிபுக்கு கொண்டுவர இராணுவம் முயற்சிக்கிறது. இது இரு தரப்பினரிடையே நடக்கும் சண்டை என்பதாலும் இராணுவத்தினரும் தாக்கப்படுகிறார்கள் என்பதாலும் காலவரம்பை திட்டவட்டமாகக் கூற இயலவில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார். (ந-5)

## யாழ்.மாநகர...

ஒப்பந்தத்துக்கு அமைய இணைக்கப்பட்ட வடக்கு,கிழக்கு மாகாணங்கள் தனி தனியாகப் பிரிக்கப்பட்ட பின்னர் வட மாகாணத்தில் முதற்தடவையாக யாழ்.மாநகர சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராகி வருகிறது.

மாநகரசபைத் தேர்தலில் கிடைக்கும் பெறுபேறுகளைக் கொண்டு வடமாகாணத்துக்கான ஏனைய தேர்தல்கள் குறித்து அரசாங்கம் தீர்மானிக்கும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்.குடாநாடு விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட பின்னர் 1998ஆம் ஆண்டு யாழ். மாநகர சபைக்கு இறுதியாகத் தேர்தல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## யாலவனப் பகுதியில் படையினர் ஒருவர் பலி

(கொழும்பு)

அம்பாந்தோட்ட யால வனப் பகுதியில் படையினர் மீது நேற்று அடையாளம் தெரியாத ஆயுதாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

யால வனப் பகுதி வலயம் -2 இல் உள்ள மாணிக்க கங்கை பாலத்தடியில் நேற்றுக் காலை இச்சம்பவம் நடந்தது. (ந-5)

# இன்று ஒரு தகவல்

## ஒரு புத்திமதி!

ஒரு நாள்அரசன் ஒருவன் தன் அமைச்சரை அழைத்துக் கொண்டு காட்டுக்குப் போனான்.

அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவர் முன்னால் போய் நின்று, "சுவாமி...என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கள் எனக்கு ஏதாவது புத்திமதி சொல்லுங்கள்!" என்றான்.

அவர் ஆசிர்வாதம் பண்ணி விட்டு அதன் பின்னர், "மகனே ! நீ எந்தக் காரியத்தை செய்தாலும் செய்வதற்கு முன்னர் ஒரு தடவை அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப் பார். உன் மனதுக்கு அது சரி- என்று தெரிந்தால் மட்டும் அதைச் செய்!" என்றார்.

அரசன் அவர் கூறியதை அப்படியே மனதில் வாங்கிக் கொண்டான். அவர் காலடியில் விழுந்து வணங்கினான். நூறு பொற்காசுகளை அவரின் காலடியில் வைத்து விட்டுத் திரும்பினான்.

அமைச்சர் இதைக் கவனித்தார்.

" என்ன இது... அரசர் இவ்வளவு ஏமாளியாக இருக்கிறாரே! இந்த சாதாரண யோசனைக்கு நூறு பொற்காசுகளை கொடுத்து விட்டாரே!" என்று நினைத்தார்.

அமைச்சர். இப்படி நினைத்தது அவரின் முகத்தைப் பார்த்தவுடனேயே அரசனுக்குப் புரிந்துவிட்டது. இருந்தாலும் அதைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை.

இருவரும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அரசன் , காட்டில் முனிவர் கூறிய புத்திமதியை ஒரு கல்லில் கல்வெட்டாக செதுக்கினான். தனது அறையில் எல்லோர் கண்ணிலும் படும்படியாக அதை பதித்து வைத்த விட்டார்.

இப்பொழுதும் அமைச்சருக்கு ஆச்சரியம்! "என்ன இது... மன்னருடைய அறியாமையைப் புரிந்து கொள்ள முடியவில்லையே! இதைப் போய் கல்லில் செதுக்கி வைக்க வேண்டுமா?" என்று நினைத்தார்.

ஒரு நாள் மன்னருக்கு கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது. உடனே அரண்மன்ன வைத்தியரைக் கூப்பிட்டார். அவர் வந்து சோதித்துப்பார்த்து விட்டு , " கொஞ்சம் பொறுங்கள்! நான் எங்கள் வீட்டுக்குப் போய் இதற்கு பொருத்தமான மருந்து தயார் செய்து கொண்டு வருகிறேன்!" என்ற ஓடினார்.

மருந்துடன் அவர் திரும்பி வந்த சமயத்தில் , மன்னர் ஒரு கட்டிலில் கண்ணை மூடி படுத்திருந்தார்.பக்கத்தில் எவரும் இருக்கவில்லை.

வைத்தியர் ஒரு சின்ன நீர் கோப்பையில் கொஞ்சம் மருந்தை ஊற்றினார். சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, ஏதோ ஒரு தூளைஅதில் கலந்தார்.

அதை எடுத்துக் கொண்டு மன்னரை நெருங்கினார். பின்னர் யோசித்து விட்டு திரும்பிச் சென்று கையிலிருந்த மருந்தை கீழே ஊற்றினார்.

அந்தக் கோப்பையை நன்றாக சுத்தம் செய்து விட்டு மறுபடியும் கொஞ்ச மருந்தை ஊற்றிக்கொண்டு வந்து " மன்னா!" என்று மெதுவாக கூப்பிட்டார்.

அவர் எழுந்து " வைத்தியரே... நான் கண்களை மூடிக் கொண்டு இருந்தாலும் அவ்வப்போது கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்.

முதலில் எதையோ கலந்து பின்னர் அதனை ஊற்றி விட்டு வேறு கொண்டு வந்தீர்கள். என்னவிஷயம் ? உண்மையைச் சொல்லுங்கள்! " என்று மிரட்டினார்.

வைத்தியர் மிரண்டு போனார் . அப்படியே மன்னரின் காலில் விழுந்தார்.

"மகாராஜா ... உங்களுடைய படைத்தளபதி உங் களைக் கொல்லசதி செய்தார்.மருந்தில் விஷம் கலந்து கொடுக்கும் படியும் வெகுமதி அதிகம் தருவதாகவும் கூறினார். நானும் சரி என்று சொல்லி விட்டு இங்கே வந்தேன்.

எடுத்துக் கொண்டு வரும்போது , நீங்கள் வைத்திருக்கும் கல்வெட்டு வாசகம்தான் கண்ணில் பட்டது!

எந்தக் காரியத்தை செய்தாலும்அதனுடைய விளைவுகளைப் பற்றி யோசிக்க சொல்லியது அந்த வாசகம். யோசித்தேன்.என் உயிருக்கே ஆபத்து என்பதை புரிந்து கொண்டேன். உடனே திரும்பிப் போய்அதை ஊற்றி விட்டு... வேறு மருந்து ஊற்றிக் கொண்டு வருகிறேன்! " என்றார்.

மன்னர் அமைச்சரைக் கூப்பிட்டார். " பார்த்தீர்களா! இந்த புத்திமதியை அன்றைக்கு நீங்கள் அலட்சியமாக நினைத்தீர்கள்.இன்றைக்கு அது தான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது! " என்றார். அமைச்சர் தலையைக் குனிந்து கொண்டார்.

அதனால் பெரியவர்கள் நமக்குச் சொல்லும் புத்திமதி சாதாரணமாகத்தான் தெரியும்! அதற்காக நாம் அதை அலட்சியம் செய்யக் கூடாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முல்லைத்தீவில் உள்ள மூன்று இலட்சம் மக்களில் 30 ஆயிரம் பேருக்கே உணவு விநியோகம்

## முல்லை.மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு தேவையான அளவு உணவுப் பொருட்கள் கிடைக்காத காரணத்தினால் சுமார் 30 ஆயிரம் பேருக்கே உலர் உணவுகளை வழங்கக் கூடியதாக உள்ளது. ஆனால் இங்கு 81 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3இலட்சத்து 30ஆயிரம் பேர் தங்கியுள்ளனர்.

ஆகையால் , ஏனைய மக்கள் பட்டினியால் வாட வேண்டியுள்ளது. ஏற்கனவே பட்டினியால் 13பேர் மரணமடைந்துள்ளனர் என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பளார் அறிவித்துள்ளார் என முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.பார்த்தீபன் தெரி வித்துள்ளார்.

இதேவேளை முல்லைத் தீவிலுள்ள மக்கள் தொகை தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ணவுடன்தொடர்பு கொண்டு கேட்டபோது, முல்லைத் தீவு பகுதியில் சுமார் 70 ஆயிரம் பேர்அளவிலேயே உள்ளனர். அங்கிருந்து சுமார் 35 ஆயிரம் பேர் வரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.பார்த்தீபன் உலக உணவுத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உலர் உணவு வழங்குவது தொடர்பாக தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் தோட்டக் கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளாருக்கு கடந்த வியாழனன்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் முல்லைத்தீவுக்கான உணவுத் தட்டுப்பாடு குறித்து அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் வவுனியா, மன்னார், யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் இடம் பெயர்ந்து அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தில் தங்கியுள்ளார்கள் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

சுமார்81ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 3இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் வரையில் மெரிடைம் பற்று உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பழைய மாத்தளன் , புது மாத்தளன் , அம்பலவன் பொக்கணை , வலஞர் மடம், முள்ளிவாய்க்கால் மேற்கு. முள்ளி வாய்க்கால் கிழக்கு மற்றும் புதுக் குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள இரணைப்பாலை. அனந்தபுரம் ஆகிய கிராமங்களில் தங்கியுள்ளனர். இடம் பெயர்ந்த இந்த மக்களுக்கு வழங்குவதற்கு எங்களுக்கு வாரமொன்றுக்கு அரிசி 462 மெட்ரிக் தொன் , கோதுமை மா462 மெட்ரிக் தொன், பருப்பு 139 மெட்ரிக் தொன், சீனி 46 மெட்ரிக் தொன், எண்ணெய் 46 மெட்ரிக் தொன், மொத்தமாக ஆயிரத்து 155 மெட்ரிக் தொன்கள் தேவைப்படுகின்றன.

தேவையான அளவு உணவுப் பொருட்கள் கிடைக்காத காரணத்தினால் இடம்பெயர்ந்த மக்களில் 30 ஆயிரம் பேருக்கே உலர் உணவு வழங்க எம்மால் முடிந்தது.

ஏனையோர் எந்த வகையிலும் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழியில் இல்லை. எனவேஅவர்கள்பட்டினியால் வாடுகிறார்கள்.ஆகவே மார்ச் மாதத்திற்கு தேவையான அளவு உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கத் தேவையான சகல ஒழுங்குகளையும் மேற்கொள்ளமாறு தயவுடன் கோருகின்றோம். (6)

# இராசி பலன்

09.03.2009

*(மாசி 25, திங்கட்கிழமை)*

*திரயோதசி முற்பகல் 11.47மணிவரை*

*ஆயிலியம் முற்பகல் 10.19 மணிவரை*

*இராகுகாலம் 7.53-9.23மணிவரை*

*சுபநேரம் 12.23-1.53 மணிவரை*

*நடேசர் அபிசேகம்.*

*மாசிமகம்*

| | |
|---|---|
| மேடம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணக் குறைவு, தாழ்ந்த சுபாவம். |
| இடபம் | தன்னம்பிக்கைக்குறைவு, உடல் நலக்குறைவு,நிலைமாற்றம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | மனோ தைரியம், இஷ்ட சித்தி, தன வருவாய், நற் கீர்த்தி. |
| கடகம் | காரியதாமதம்,விதண்டா வாதம், அதிகசெலவு, போசனசுகக் குறைவு. |
| சிங்கம் | வெகுமானம், கற்பனை மிகுதி, போசன சுகம், தொழில் முயற்சி. |
| கன்னி | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், காரிய அலைச்சல், பண விரயம். |
| துலாம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம், கீர்த்தி. |
| விருச்சிகம் | நன் கொடை, தேகாரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய நன்மை. |
| தனுசு | உத்தியோக பங்கம், வீண் பயம், பிரயாணம், எதிர்பாராத செலவு. |
| மகரம் | காரிய தடங்கல், பொருள் விரயம்,ஆரோக்கியக் குறைவு, கலகம். |
| கும்பம் | மனோ தைரியம், தனலாபம், எடுத்த காரியம் கைகூடும், களஸ்திர நன்மை. |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், நோய் குணமடைதல், தன வருவாய், நண்பர்கள் ஒத்தாசை. |

வளவன்

# விண்ணப்பம் கோரல்

தொழில் நுட்பக் கல்விப் பயிற் சித்திணைக்களத்தின் கீழுள்ள இலங்கைத் தொழில் நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பின் (விசேட ஆளணி) பதவிகளுக்கு விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அவற்றுக்கான தமிழ் மொழி மூல வெற்றிடங்களின் எண்ணிக் கைகளும், வெற்றிடமாகவுள்ள பதவிகளும் வருமாறு,

இலத்திரனியல் போதனாசிரியர் (07), கட்டிடத் தொழில்துறைத் போதனாசிரியர் (09), மோட்டார் இயந்திரவியல் போதனாசிரியர் (09), மரவேலை போதனாசிரியர் (09), குளிரூட்டல் மற்றும் வளிச் சீராக்கல் போதனாசிரியர் (02), தொழில்நுட்ப வரைதல் போதனா சிரியர் (08) , மின்னியல் தொழில் துறைத் போதனாசிரியர் (09), கண னித் தொழில்நுட்பவியல் போதனா சிரியர் (08), விஞ்ஞானம் மற்றும் கணிதம் போதனாசிரியர்(01), வணிகக் கல்வி போதனாசிரியர் (02), உலோகவேலை போதனாசி ரியர் (06).

அத்துடன் ஆங்கில மொழித் துறை போதனாசிரியர் பதவிக்கு 66வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு *பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் , த.பெ. இல557, கொழும்பு 10* எனும் முகரிக்கு அனுப்பப்படல் வேண்டும்..

✹✹✹

இலங்கைத் திட்டமிடல் சேவை யின் IIஆம் வகுப்பு , IIஆம் தர உத்தி யோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை , பரீட்சைகள் ஆணையாளரினால் எதிர் வரும் யூன் மாதம் கொழு ம்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்ப டவுள்ளது.

இவ் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை,

- திட்டமிடல் கொள்கைகள் மற்றும் விதி நுட்பங்கள் , திட்டமிடல் நிறுவனம் , நிதி மற்றும் நிருவாகம்.
- பொருளாதார பகுப்பாய்வு மற்றும் கணக்கிடல்
- கருத்திட்டங்களை திட்டமிடல்
- ஆங்கில மொழி

ஆகிய வியங்களை கொண்டதாகும் விண்ணப்படிவங்கள்தமது திணைக்களத் தலைவரின் ஊடாக ஏப்ரல் 3 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை , பெலவத்தை ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு , இலங்கை பரீட்சைகள் திணைக் களம் , பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக் கப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக் விப ரங்களை 2009.03.06ஆம் திக திய வர்த்தமானியிலோ அல்லது வலம் புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 60 | 80 |
| தக்காளி | 60 | 70 |
| அவரை | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | - |
| கோவா | 30 | 40 |
| கரட் | 60 | 70 |
| பூசணி | 25 | 40 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 120 | 130 |
| சின்ன வெங்காயம் | 25 | 35-40 |
| பெரிய வெங்காயம் | 50 | 50-60 |
| பாகற்காய் | 60 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கரணைக் கிழங்கு | - | 40 |
| பயிற்றங்காய் | 50 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 |
| போஞ்சி | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 15 | 10-15 |
| தேசிக்காய் | 100 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30-35 |

# ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 8 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திற்குரிய வழிகாட்டல் செயலமர்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வுகளில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை புவியியலும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை வரலாறும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமையும் என்ற ஒழுங்கில் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைவாக குறித்த பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள் அறிவுரை வழிகாட்டி, செயற்பாடு பாடத்திட்டம் என்பவற்றை செயலமர்வின் போது எடுத்து வருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (5,6-29)

# சவூதியிலிருந்து வந்த இளைஞன் கொழும்பில் காணாமல் போயுள்ளார்

## யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

சவூதி அரேபியாவிலிருந்து கொழும்பு திரும்பிய யாழ்ப்பாண இளைஞர் ஒருவரைக் காண்வில்லை என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய், சங்குவேலி கிழக்கைச் சேர்ந்த அருள்ரூபன் வினோத் (வயது 24) என்ற இளைஞனையே கடந்த 4 ஆம் திகதி முதல் காணவில்லையென அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் வழியிலேயே காணாமல் போயுள்ளதாக உறவினர்கள் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். (5-30)

# 'பட்டாம் பூச்சிகள்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட இசைத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் தயாரிப்பில் உருவான அபிநயப் பாடல் தொகுப்பு 'பட்டாம் பூச்சிகள்' ஒலி,ஒளி இறுவெட்டு நூல் வெளியீட்டு விழா யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நாளை காலை 9மணிக்கு இடம்பெறுகின்றது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (5-4)

# செயலமர்வுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்கள், விசேட கல்வி ஆசிரியர்கள் ஆகியோருக்கான செயலமர்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை மற்றும் 14 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (5-2-29)

# முதலாம் காலாண்டுக்கான மருந்துகள் எடுத்து வருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்குத் தேவையான முதலாம் காலாண்டுக்குரிய மருந்து வகைகள் கப்பல் மூலம் எடுத்து வரப்படவுள்ளன.

முதலாம் காலாண்டுக்குரிய மருந்து வகைகள் உரிய காலத்தில் வந்து சேராமையினால் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.குடாநாட்டிலுள்ள பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் முக்கிய மருந்து வகைகளுக்கு, பற்றாக்குறையும் தட்டுப்பாடும் நிலவி வருகிறது.

இம் மருந்துத் தட்டுப்பாடு, பற்றாக்குறையினால் வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் தனியார் மருந்தகங்களில் தமக்குத் தேவையான மருந்து வகைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது.

இந்நிலையில், யாழ்.குடாநாட்டு வைத்தியசாலைகள் அனைத்திற்கும் தேவையான முதலாம் காலாண்டுக்குரிய மருந்து வகைகளை சுகாதார அமைச்சு அனுப்பி வைக்கவுள்ளது. அடுத்த வாரத்தில் இம் மருந்து வகைகள் கப்பல் மூலம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5)

# கூட்டுறவு பயிற்சிநெறி வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் 2009 ஆம் ஆண்டிற்கான புதிய பயிற்சி நெறி வகுப்புக்கள் இன்று ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரி அதிபர் திருமதி வே. செல்லமுத்து அறிவித்துள்ளார்.

இப்புதிய பயிற்சி நெறிகள் கூட்டுப் பத்திர தாரர் உயர் பிரிவு மற்றும் சாதாரண பிரிவு என இரண்டு பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5-30)

# நவநாள் திருவிழா

(பருத்தித்துறை)

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த நவ நாள் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 4 மணிக்கு நவநாள் ஆராதனைகளைப் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட் திரு. எக்ஸ்.றெக்னோ அடிகளார் நடாத்துகின்றார்.

18 ஆம் திகதி நற்கருணைத் திருப்பவனி ஆராதனை நடைபெற்று மறுநாள் காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. (5-52)

# யாழ்.செய்திகள்

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவிலில் இரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் சிவன் கோயில் வீதியில் நேற்றுக் காலை 6 மணிக்கு இடம்பெற்ற இவ் விபத்தில் மட்டுவிலைச் சேர்ந்த சின்னத்துரை சிவனேஸ்வரன் (வயது 32) என்ற இளைஞரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (5-30)

# வன்னியிலிருந்து வரும் மக்கள் கைதடி சிறுவர் இல்லத்தில் தங்கவைப்பு

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வருபவர்களை கைதடி சிறுவர் இல்லத்தில் தங்கவைப்பதற்கான பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இருந்து பாதுகாப்புத் தேடி யாழ்.குடாவிற்கு அழைத்து வரப்படும் மக்கள் மிருசுவில் றோ.க.பாடசாலை, கொடிகாமம் அ.த.க.பாடசாலை, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, குருநகர் நலன்புரி முகாம் போன்ற இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக கைதடி சிறுவர் இல்லம் யாழ். செயலகத்தால் பொறுப்பேற்கப்பட்டு தற்போது மக்களை அங்கு தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வன்னியில் தொடரும் மோதல் நடவடிக்கை காரணமாக யாழ்.குடாவிற்கு இதுவரை 2ஆயிரத்து 436 பேர் வருகை தந்துள்ளனர். (5)

# நடேசர் அபிஷேகம்

சித்தன்கேணி சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் மாசி மகத்தை முன்னிட்டு இன்று காலை 10.00 மணிக்கு நடேசரபிஷேகமும் விசேட பூஜையும் இடம்பெறவுள்ளது. (5-30)

# பரிசளிப்பு விழா

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் வெ.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சங்கானை இலங்கை வங்கி முகாமையாளர் வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-4)

# சட்டவிரோத மின்பாவனை காரைநகரில் அதிகரிப்பு

(காரைநகர்)

காரைநகரில் சட்டவிரோதமான மின் பாவனை அதிகரித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வேதரடைப்பு, மல்லிகை,மாப்பாணவூரு, கருங்காலி,வாரிவளவு போன்ற பகுதிகளில் அண்மைக்காலமாக சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரியவருகிறது.

இதனால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படவாய்ப்புள்ளதாகக் குறிப்பிடும் அப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளனர். (5-246)

# இரதோற்சவம்

வண்ணை கன்னாதிட்டி காளிகாம்பாள் தேவஸ்தான மஹோற்சவத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் நாளை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.


இவ்வாலய மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது (5-4-30)

# ஆரம்ப கல்வி கண்காட்சி

(இளவாலை)

இளவாலை மாசியப்பிட்டி றோ.க.த.க. பாடசாலையின் ஆரம்பக் கல்வி கற்றல் சாதனக் கண்காட்சி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை பாடசாலை வளாகத்தில் அதிபர்சு.நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமாரனும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி ரூபா உதயரட்ணமும், கௌரவ விருந்தினராக மாசியப்பிட்டி பங்குத்தந்தை அருட்திரு எம்.எம்.எஸ்.ஞானேந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (5-2)





வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள அனுசரணையுடன் வலி .கிழக்கு பிரதேச செயலகத்தால் அண்மையில் நடாத்தப்பட்ட தையல் அழகியல் பொருட்களின் கண்காட்சியில் உதவிப் பிரதேச செயலர் செல்வி எஸ்.பிறேமினி மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், முன்னாள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜி.ரி. ஞானசேகரவேல் ஆகியோர் நிற்பதையும், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் த.தியாகமூர்த்தி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

# அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை



1980 இல் நியூயோர்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஒபாமா படித்துக்கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்

**1995-** தன்னைப் பற்றிய நூலான "எனது தந்தையின் கனவுகள்" வெளியிடப்பட்டது.

இதில் தன்னுடன் வாழாத தந்தையோடுள்ள உறவு, இனவாதம் பற்றிய தனது கருத்துகள், போதைப்பொருளோடு தன் அனுபவம், கென்யா யாத்திரை இன்னோரன்ன விடயங்கள் பேசப்படுகின்றன.

சில மாதங்கள் கழிந்ததும் அவருடைய தாய் கருப்பைப் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு உயிர் நீர்த்தார். அப்போது அவருக்கு 52 வயது.

**1996-** ஒபாமா இல்லினோயிஸ் மாநிலத்தின் செனட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 13 ஆம் மாவட்டத்தின் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதியாவார்.

இம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய கறுப்பின மக்கள் வாழும் பகுதியாகும்.

**1998-** ஒபாமா தம்பதிகளின் முதலாவது பெண் குழந்தை பிறந்தது. அவளுக்கு மாலியா ஆன் (Malia Ann) என்று பெயரிட்டனர்.

**1999-** மக்களவைத் (Congress) தேர்தலில் நின்று தோற்ற ஒபாமா தொடர்ந்து இல்லினோய் மாநிலத்தின் செனட் சபை அங்கத்தவராகப் பதவி வகித்தார்.

**2001-** இரண்டாவது பெண் குழந்தை நடாஷா பிறந்தாள். செல்லமாக சாஷா என அழைப்பர்.

**2003-** இல்லினோயிஸின் சுகாதார மனிதவள குழுவுக்குத் தலைவரானார். தை மாதம் அவர் ஐக்கிய அமெரிக்காவின் செனட் சபையின் தேர்தலில் போட்டியிடத் தன்னைத் தயார்ப்படுத்தினார்.

முதற்கட்டத் (PRIMARIES) தேர்தலில் ஒபாமாவின் எதிராளியும் ஜனநாயகக் கட்சி வேட்பாளருமான பிளெயர் ஹள் (Blair Hull) என்பவர் தெரிவு செய்யப்படும் நிலையில் இருந்தார்.

ஆனால் சிறிது நேரத்தில் அவர் மேல் சுமத்தப்பட்ட முறைகேடுகள் காரணமாக தேர்தல் களத்தில் இருந்து பின்வாங்குகிறார்.

**2004-** ஒபாமா ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டில் சிறப்புரை ஆற்றுமாறு

**ஜம்பொன்**

அழைக்கப்பட்டார். அவ்வுரை அவருக்கு உலகளாவிய அங்கீகாரத்தைத் தேடித் தந்தது.

நவம்பர் மாதம், அவருக்கு 43 வயதாகும் போது (U.S.Senate) செனட் சபையின் (மத்திய அரசு) அங்கத்தவராக 70 வீத வாக்குகளைப் பெற்றுத் தேர் வானார்.

நாட்டின் 5வது ஆபிரிக்க- அமெ ரிக்கர் செனட்டரானார். கர்த்தீனா என்ற சுழற் காற்று சண்டமாருதமாக ஊழித் தாண்டவமாடிய போது ஏற்பட்ட அழிவுக் காலத்தில் நிவாரணப் பணிகளை முழு மூச்சோடு செயற்படுத்தினார்.

**2006-** தனது இரண்டாவது நூலான "நம்பிக்கையின் துணிவு" (Audacity of Hope) வெளியிடப்பட்டது. அவருடைய அரசியல் கனவுகளை அள்ளித் தருகிறது இந்நூல். சிறந்த நூலான இதனைக் கணக்கற்ற வாசகர்கள் வாங்கிச் சென்றனர்.

10



1992 இல் ஒபாமா- மிசேல் திருமணம் நடைபெற்றது

**2007-** US அதிபர்தேர்தலுக்குதான் வேட்பாளராக நிற்பதை (OLD STATE CAPITOL) பழைய ராஜதானிக் கட்டத் தின் படிக்கட்டில் நின்று வெளியிட்டார். இங்கிருந் துதான் ஆப்ரஹாம் லிங்கன் அடிமைத் தனத் துக்கெதிரான தனது புகழ்பூத்த பேச்சை ஆற்றினார்.

**2008-** புதன் 5 நவம்பர் 2008 இந்தக் கிழமைதான் அவரின் பேர்த்தியார் மடிலீன் டன்ஹம் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு 86 வயதில் இவ்வுலகை நீத்தார்.

□□ அதிபர் தேர்தலில் வெற்றிவாகை சூடிய கையோடு தன் ஆட்சி அமைச்சர்கள், அதிகாரிகளை நியமிக்கத் தொடங்கினார். (தொடரும்)


சேவை நலன் பாராட்டும்
பிறந்தநாள் வாழ்த்துக்களும்



உயர் திரு. கந்தையா ஆனந்தராசா
(கவிமணி அன்னைதாசன்)
அதிபர் -யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

| | | |
|---|---|---|
| பிறந்த திகதி | :- | 10.03.1949 |
| ஆரம்பக்கல்வி | :- | யா/ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாசாலை |
| O/L | :- | யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் |
| A/L | :- | யா/தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி |

- 04.12.1972 இல் முதல் நியமனம் ஆசிரியர் யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை
- 1975 -1976 வரை பலாலி ஆசிரியர் கலாசாலையில் விவசாய விஞ்ஞானப் பயிற்சி
- 1977-1981 வரை வாழைச்சேனை முஸ்லிம் மகாவித்தியாலயம் -மட்டக்களப்பு
- 1982-1989 யா/ காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி
- 1989-1999 யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை
- 1999 - 09.03.2009 வரை அதிபர் யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

பார்வைகள்
1.பாடப்புத்தக எழுத்தாளர் (இருநூல்கள்)
2.கவிதை, ஆன்மீக, சமூக, அறிவியல், கவிஞர்
3.சிறுகதை எழுத்தாளர் -வலம்புரி, சிந்தாமணி
4.வில்லிசைக் கலைஞர்
5.நாடக நடிகர் (பக்த மார்க்கண்டேய பரிசில் பெற்றது)
சிறந்த நடிகர் (குரும்பசிட்டி சன்மார்க்க சபை போட்டிகள்)
6.இசைச் சொற்பொழிவாளர்
7.பாடகர்
8.பத்திரிகைப் பத்தி எழுத்தாளர்
9.சிறந்த பௌராணிகர் ஓதுவார் (திருவிளையாடல் புராணம்)

1.புலோலி பற்பத பத்தினி அம்பாள் பெரிய புராணத் தொடரில் தங்கப்பதக்கம்
2.சந்நிதியான் ஆச்சிரமவிருதுகள்த பாராட்டுக்கள்த பல அரங்குகளில் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு
3.தங்கம்மா அப்பாக்குட்டி தங்கம்மா அம்மா அம்மா (04.06.1995)
4.என் தாயே என்ற பாடலுக்காக பொன்னாடைத பொற்கிளி
5.தலத்திரு விருதுகள்
முருகேசுச் சுவாமிகளின் ஆசியுடனான முதன்முதல்
கந்தன் கவியமுத இசை நாடா நூல் வெளியீடு 02.04.1994
கற்பகக்கனி ஆன்மீக வெளியீடுகள் இல 01 -16 வரை

எல்லையிலா புகழ்மேவி இன்பம் சூழ
இணையிலா பாடசாலை குடும்பத்தோடு கூடி வாழ்ந்து
அஞ்சாத அதிபரெனப் பேரும் பெற்று
அகிலமதில் உயர்ந்திட வாழி !வாழி!
என வாழ்த்தும்

அதிபர், ஆசிரியர்கள் , மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
நலன்விரும்பிகள்.
உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

(2382)

# கிரிக்கெட் அணி மீது காட்டிய அக்கறையை தமிழர் மீதும் அரசு காட்ட வேண்டும்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் லாகூரில் இலங்கைக் கிரிக்கெட் அணியினர் பயணித்த பஸ்மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் போது காட்டிய அதே கரிசனை தமிழர் நலனிலும் காட்டப்படவேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்ட அதே கரிசனையும் அவசர நடவடிக்கைகளும் வடபகுதி மக்கள் நலன் தொடர்பிலும் காட்ட வேண்டியது அவசியமானதென மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி தெரிவித்துள்ளார்.

வட பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களும் இலங்கையர்களே எனவும் அவர்கள் நலன் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசுக்கு உண்டு எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வன்னி யுத்தப் பிரதேசத்தில் 70 ஆயிரம் மக்களே உள்ளனரென அரசாங்கம் கூறுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் சுமார் மூன்றரை இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர்.

இலங்கை இராணுவத்தின் யுத்த முன்னெடுப்புகளால் இந்தப் பகுதி மக்கள் வன்னிப் பிரதேசத்துக்குச் செல்லும் நிலையேற்றப்பட்டது.

அந்த எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டிருந்தால் உண்மையில் மக்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி ஆராயப்பட வேண்டும் என குறிப்பிட்ட அவர் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள் 32 ஆயிரம் மக்களே வந்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-5)

## உள்நாட்டு இறைவரித்திணைக்களம் புதிய கட்டடத்துக்கு இடமாற்றம்

விடுதலைப்புலிகளின் விமானம் மோதி சேதமடைந்த உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வேறொரு கட்டத்துக்கு இடம்மாற்றப்படவுள்ளது.

புறக்கோட்டைப் பகுதியில் அமைந்திருந்த உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டடம் விடுதலைப்புலிகளின் விமானம் மோதிச் சேதமடைந்தது. இதனால் திணைக்களத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதனைத்தொடர்ந்து திணைக்களத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கில் கொழும்பு நகரிலுள்ள பிறிதொரு அலுவலகக் கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளது. (6)

# வன்னி மோதல்களினால் காயமடையும் சிறுவர்களின் எண்ணிக்கை உயர்வு

வன்னி மோதல்களில் காயமடையும் சிறுவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக பிரபல ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாக மோதல்களில் காயமடைந்து சிகிச்சைகளுக்காக அனுமதிக் கப்பட்ட சிறுவர் சிறுமியரின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

முல்லைத்தீவிலிருந்து திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்ட 19 படுகாயமமைடந்த சிறுவர்கள் கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

காயமடைந்து கொழும்பு வைத்திய சாலைகளுக்கு மாற்றம் செய்யப் படும் சிறுவர்களின் எண்ணிக்கை உயர் வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிகிச்சை பெற்று குணமடையும் சிறுவர்கள் மீண்டும் அகதி முகாம்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கொழும்பின் பிரபல வைத்தியசாலையொன்றின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (6)

# க.பொ.த.சாதாரண தர பெறுபேறுகளை பாடசாலை விடுமுறைக்கு முன் வெளியிட தீர்மானம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைப் பெறுபேறுகளை அடுத்த பாடசாலை விடுமுறைக்கு முன்னர் வெளியிடவுள்ள தாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு சுமார் 5 இலட்சத்து 42 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

பரீட்சை நடைபெற்ற தினங்களில் பல்வேறு மோசடிகள் தொடர்பாக குற்றம் சுமத்தப் பட்டிருந்த மாணவர்கள் குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாக குறிப்பிட்ட பரீட்சை ஆணையாளர் இந்த விசாரணைகளில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் மாணவர்களின் பெறுபேறுகளை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சுட்டிக்காட் டினார். (6-4)

# வன்னியில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு

முல்லைத்தீவில் குழந்தைகளுக்கான பால்மா மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருவதுடன் உள்ள சொற்ப பொருட்களும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த வகையில் எஸ்.எம்.ஏ.பால்மா ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுவதாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மீன் ஒரு கிலோ ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபா வரையும், செத்தல் மிளகாய் ஆயிரம் ரூபா வரையும், முட்டை 50 ரூபா, தேசிக்காய் ஒன்று 150 ரூபா, ஏனைய பால்மா ஆயிரம் ரூபா, தேங்காய் ஒன்று 140 ரூபா முதல் 150 ரூபா வரையும், அரிசி கிலோ 180 முதல் 200 ரூபா வரையும், மரக்கறி ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபா வரையும், கீரை ஒரு கட்டு 100 ரூபா முதல் 200 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுவதாக பொது சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார். (6)



யா/ பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் கே.இலட்சுமணசர்மா தம்பதிகள் மற்றும் விருந்தினர்கள், பாடசாலை அதிபர் ஆகியோர் மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.


யாழ்.மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடாத்தும்

-மாதாந்த கருத்தரங்கு-

காலம்: 10.03.2009 அன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி

இடம்: யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபம்

**தலைவர்**

திரு. மனுவல் வித்தியானந்தநேசன்

கருத்துரை வழங்குபவர்

வைத்திய கலாநிதி P.லக்ஸ்மன்

(இருதய சத்திர சிகிச்சை நிபுணர்)

"நலமான வாழ்விற்கு இதமான இதயம்"

**நிகழ்ச்சி நிரல்**

- ★ வரவேற்புரை : திரு P.ராகவன்
- ★ தலைமையுரை : திரு.ம.வித்தியானந்தநேசன்
- ★ ஆசியுரை : திரு.க.கணேஸ் (அரச அதிபர், யாழ்.மாவட்டம்)
- ★ கருத்துரை : வைத்திய கலாநிதி P.லக்ஸ்மன்
- ★ கலந்துரையாடல்
- ★ நன்றியுரை :திரு.க.கருணாகரன்

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.மாவட்டச் செயலகம்
நலன்புரிச் சங்கம்.

பிரசுர அன்பளிப்பு: பிள்ளையார் அச்சகம், நல்லூர்

ஊடக அனுசரணை: சரஸ்வதி விலாஸ்
70,பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(C-2191)



பணி நயப்பு வாழ்த்து



'கவிமணி' க.ஆனந்தராசா அவர்கள்
(அன்னைதாஸன்) SLPS
அதிபர், யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

ஆசிரிய சேவையில் :- 04.12.1972-05.05.1999
அதிபர் சேவையில் :-06.05.1999-09.03.2009

சந்திர உதயத்தின் தலைமகன் நாளை நாள்
வந்தவீர் முப்பதாம் வயதினைக் காண்கிறார்
நந்தமிழ் சைவமீர் வாழ்விற்காய் உழைத்திடும்
சுந்தரர் ஒய்வினிற் சுகம்பல காண்கவே !

தன்னலம் பெரிதாகக் கருதாத தகையவர்
பன்னருஞ் சேவையோ இருபத்தே ழாண்டுகள்
மன்னிய 'கவிமணி' பட்டமும் பெற்ற நம்
புண்ணியன் அன்னை தாஸனார் வாழ்கவே!

இன்று பணி ஓய்வு பெறும் திரு.க.ஆனந்தராசா அவர்கள் சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வு எய்த மனமுவந்து வாழ்த்துகிறோம்.

கோப்பாய்க் கல்விக் கோட்ட
அதிபர் சங்கம்.

(C-2190)

# மைக்கல், மிலான்டோ அரைச்சதம் அடித்தனர்

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி இறுதிப் போட்டிக்கு தகுதி

(யாழ்ப்பாணம்)

மைக்கலின் சகல துறை ஆட்டத்தின் மூலம் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

யாழ்.மாவட்ட்ப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடாத்தும் தெரிவுசெய்யப்பட்ட 7 பாடசாலை அணிகளுக்கிடையிலான விலகல் முறையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 215 ஓட்டங்களை எடுத்தது.

இதில் எம். ஹரிப்பிரவீன் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும் அணித் தலைவர் வி.பிரணவன் 41 ஓட்டங்களையும் ஜெயந்தன் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மைக்கல், கவாஸ்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கஜமுகன், லவதீசன் மற்றும் அணித் தலைவர் நிலோசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 216ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மைக்கல் மிலான்டோவின் சிறப்பான அரைச் சதத்தின் மூலம் 41.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 219 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதில் மிலான்டோ 52 பந்துகளில் 66 ஓட்டங்களையும் மைக்கல் ஆட்டமிழக்காமல் 65 பந்துகளில் 55 ஓட்டங்களையும் ஹமில்ரன் 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வி.பிரணவன் 2 விக்கெட்டுக்களையும், தவநீதன், விதுஷன் மற்றும் ஹரிப் பிரவீன் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர். (5-30)

# ஹொக்கி நடுவர்களுக்கு நாளை செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கத்தினால் ஹொக்கி நடுவர்களாகக் கடமையாற்றுபவர்கள் மற்றும் கடமையாற்ற விரும்புவர்களுக்கான செயலமர்வும், பரீட்சையும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடை பெறவுள்ளதாக செயலாளர் ஆர்.குகன் அறிவித்துள்ளார். (5)

# தென்மராட்சி கல்வி வலய மட்ட

# மேசைப்பந்து, கரப்பந்து, பூப்பந்து போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்து, கரப்பந்து மற்றும் பூப்பந்து ஆகிய போட்டிகளில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விபரங்கள் வெளியிடப்பட்டுள் ளது.

**மேசைப்பந்து பெண்கள் அணி**

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை, வீரசிங்கம் மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**மேசைப்பந்து ஆண்கள் அணி**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம்.

**பூப்பந்து 19 வயது**
**ஆண்கள் அணி**

வரணி மகாவித்தியாலயம் , மட்டுவில் மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்.

**பூப்பந்து 19 வயது**
**பெண்கள் அணி**

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை, வரணி மகாவித்தியால யம்.

**கரப்பந்து 15 வயது**
**பெண்கள் அணி**

மட்டுவில் தெற்கு அ.த.க.பாடாசலை, கச்சாய் அ.த.க.பாடசாலை, கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை.

**கரப்பந்து 17 வயது**
**பெண்கள் அணி**

கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். டிறிபேக் கல்லூரி.

**கரப்பந்து 19 வயது**
**பெண்கள் அணி**

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி., சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**கரப்பந்து 15 வயது**
**ஆண்கள் அணி**

கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி., மட்டுவில் மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தி.

**கரப்பந்து 17 வயது**
**ஆண்கள் அணி**

முத்துக்குமாரசுவாமி மகா வித்தி., வீரசிங்கம் மகாவித்தி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**கரப்பந்து 19 வயது**
**ஆண்கள் அணி**

மீசாலை வீரசிங்கம் மகாவித்தி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா.வித்தி. (5-4-29)

# பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சி முகாமிற்கு தெரிவானோர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்ஜோனஸ் கல்லூரியில் எதிர் வரும் 13,14,15 ஆம் திகதிகளில் 'கொக்கோ கோலா' அனுசரணையுடன் நடாத்தப்படும் கிரிக்கெட் பயிற்சி முகாமிற்கு யாழ். பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளிலிருந்து வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

வீரர்களுக்கு பயிற்சிக்கு தேவையான அறிவுறுத்தல்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

அத்துடன் இப்பயிற்சி முகாமுக்குக் கொண்டு`வரவேண்டிய உபகரணங்களும் அறிவிக்கப்பட்டள்ளது. தெரிவுசெய்யப்பட்ட சகல வீரர்களும் எதிர்வரும் 13ஆம்திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் பாடசாலை ரீதியாக வருமாறு,

**சென் பற்றிக்ஸ் கல்லூரி**

எஸ்.மிலாண்டோ ஜெனிபர் ,பி.நவதீபன் .எம்.வி.கமில்டன்,ஏ.எம்.மனோஜ், எம்.டி. சஜீந்திரன், ஜி.ஜெகன் றெஜீலுஸ்.

**சென் ஜோன்ஸ் கல்லூரி**

ஏ.விதுசன் .வி.பிரவணன் வி.ஹரிவதனன் . ஆர் கஜீபன்,எஸ்.பிரியதர்சன்.பி. ஜெயந்தன் .

**விக்ரோறியாக் கல்லூரி**

எஸ்.நகுலேந்திரன் ,ரி.முகுந்தன், இ.அசோக்கிருஷ்ணா. ஜி.கோவரதன், கே.ஜெயக்குமார்.வி.கபில்சாந்.

**யாழ்ப்பாணக் கல்லூரி**

ஜெ.நிகேதன்,பி.சிறீகுகன்,எஸ்.கோமளதரன், கே.பிரசோபனாத்,எஸ். சீராளன், ரி.பிரியலுக்ஷன்.

**ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

ஆர்.தஜீகன், ஆர்.சிறீகஜன் கே. புருஷோத்மன் ,ஆர்.ரஜிந்தன்,டபிள்யூ.சதுசன் , ரி.தரணன்.

**மகாஜனாக் கல்லூரி**

எஸ்.டிலுக்ஷன்,பி.பார்த்தீபன்,ரி.விஸ்ணுகாந், கே.வைகுந்தன் ,வி.கபில்தேவ், கே. பிலன்.

**கொக்குவில் இந்துக்கல்லூரி**

கே.நிரோஜன், என்.கார்த்திக், கே.பவிந்திரன், கே.பவிராஜ்,கே.ஜனுதாஸ், எஸ்.ஜனுதலன்.

**யாழ். இந்துக்கல்லூரி**

என்.திருத்தணிகன்,எஸ்.செந்தூரன்,கே.டிலுக்ஷன். ஆர்.நிரூஜன், என். நிஷாந்தன், ஏ.அனோஜன்.

**யாழ்.மத்திய கல்லூரி**

எஸ்.ஜேம்ஸ் ஜன்சன், ஆர்.கோபிகன், ஆர். எட்வேர்ஸ் எட்வின், ஆர்.ஜெனோசன், எஸ்.ஜெரிக் துஷாந்த்.

**மானிப்பாய் இந்துக்கல்லூரி**

ஆர்.உமாசங்கர் ,எஸ். பிரபாகர், ஏ.ஜீவராஜ்,

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

ஏ.பசிலன், ஏ.உஷானந்த், ஆர்.வஜிதரன்.

**ஹாட்லி கல்லூரி**

எஸ்.விஸ்ணுசந்தர் , எஸ்.விமலராஜ், வை.கபில்ராஜ்.

**யூனியன் கல்லூரி**

கே. சுயந்தன்,என். துஷ்யந்தன், ரி.டினேஸ்.

**பெரியபுலமகாவித்தியாலயம்**

கே. பிரதீஷன், எம்.உமாராஜ்.

**நெல்லியடி மகா வித்தியாலயம்**

ஜே.உமைசுதன்,வி.தர்சன்.

**கனரகரத்தினம் மகா வித்தியாலயம்**

ஜெ.எனோஜன்



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் கழக அணிகள் மோதும் காட்சிகள்...

# சர்வதேச மகளிர் தினமும்

# யாழ்ப்பாண பெண்கள் நிலையும்



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம் பிள்ளை(Ph.D.Durham)
முன்னாள் துணைவேந்தர்

(நேற்றைய தொடர்ச்சி...)

**பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரிப்பு**

கடந்த மூன்று தசாப்தங்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் மத்தியில் ஒரு பக்கம் சில பாதகமான விளைவுகளும் மறு பக்கத்தில் சில முன்னேற்றகரமான நிகழ்வுகளும் ஏற்பட்டுள்ளன. இப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள முடிவுறாத யுத்தத்தாலும் அதன் வழியாக ஏற்பட்ட உயிர் இழப்புக்கள், பொருள் இழப்புக்கள் , அகதி வாழ்க்கை காரணமாக பெரும் எண்ணிக்கையான பெண்கள் தங்கள் கணவர்களை , உறவுகளை இழந்தனர். விதவை வாழ்வு இவர்களுக்கு பெரும் துன்பத்தையும் பெரும் குடும்பச் சுமையையும் கொடுத்துள்ளது. சமூக பொருளாதார உளவியல் ரீதியில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வன்செயல் , விபத்து, இயற்கைஅனர்த்தம் , தற்கொலை ஆகிய காரணங்கள் யாழ்ப்பாண மரணங்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. யுத்தத்தாலும், இடப் பெயர்வாலும், அகதி வாழ்வாலும் வாழ்க்கையைத் தொலைத்த பெண்கள் யாழ்ப்பாணத்தில் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றார்கள். அகதி வாழ்வாலும் சமூகச் சூழ்நிலைகளாலும் இளம் வயதில் விவாகம் செய்த, விவாகம் செய்யாமல் ஒன்று சேர்ந்து வாழ்ந்தஆண்கள், பெண்கள் , இறுக்கமான குடும்பவாழ்வு வாழாது இன்று இவர்கள் மத்தியில் பிரிந்து வாழ்தல், விவாகரத்து போன்றன பெரும் எண்ணிக்கையில் அதிகரித்து இருப்பதால் யாழ்ப்பாணத்தில் முன் என்றும் இல்லாத சமூகப் பிரச்சினை தோற்று விக்கப்பட்டுள்ளது. கைக் குழந்தையுடன் கணவனை எதிர்பார்த்து அன்புக்காக , உதவிக்காக ஏங்கி நிற்கும் இளம் பெண்கள் அதிகரித்துள்ளனர்.

ஒரு பெற்றோர் குடும்பக்கூட்டமைப்பு பெருகி வருகின்றது. பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் அதிகரித்துள்ளன.

**பெண் முன்னேற்றத்திற்கான தடைகள்**

பெண்களுக்கு எதிரானகுடும்ப வன்முறைகள், கருத்துத் திணிப்பு, அடக்கு முறை இன்றும் யாழ்ப்பாணத்தில் முற்றாக விடுபடவில்லை என்றே கூறலாம்.வீட்டு வன்முறைகள் பொதுவில் வெளிவருவதில்லை. பெண்கள் சொத்து உரிமை உடையவர்களாக இருந்தாலும், சீதனம் கொண்டு வந்தவளாக இருந்தாலும் தனது விருப்பப்படி செலவு செய்யும் சுதந்திரம் பேச்சளவிலேயே இருக்கின்றதென்று குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இடம் பெற்று வரும் யுத்தத்தாலும்,அதனோடு தொடர்பான பல செயற்பாடுகளாலும் யாழ்ப்பாணத்தில், பெரும் எண்ணிக்கையானவர்கள் வாழ்வாதாரங்களைஇழந்து ஏதிலிகளாயினர். வேலையின்மை பரவலாகக் காணப்படுகின்றது.

இத னால் வறுமை, ஊட்டச் சத்துக் குறைவு, உணவுப் பாதுகாப்பின்மை, இருப்பிடமின்மை, அந்தரங் கத்தன்மையின்மை, பாதுகாப்பின்மை போன்ற பிரச்சினைகள் எழுந்துள்ளன. இவற்றால் கூடுத லாகப் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய குறைபாடுகள் பெண்கள் முன் னேற்றத்துக்கு பெரும் தடைகளாக இருந்தாலும் யாழ்ப்பாணத்து பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள் எனக் குறிப்பிடலாம்.

**சாதிக் கட்டமைப்பில் ஏற்பட்டமாற்றம்**

1980 களிலிருந்து யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட போராட்ட சூழ்நிலைகளால் நீண்ட காலமாக சாதி அடிப்படையில் அடக்கி , ஒடுக்கப்பட்டு நலிவுற்று இருந்த கீழ் மட்ட சமூகங்கள் விழித்தெழ வழி பிறந்தது. அவர்களது சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையாக இருந்த தடைக்கற்கள், கட்டுப்பாடுகள் நீங்கத் தொடங்கின. சமூகப் புறந்தள்ளலால் பெரிதும் பாதிப்புற்று இருந்த இப்பிரிவினர் பொதுவான சமூக நீரோட்டத்துடன் இணைந்து செயற்பட வழிகள் திறக்கப்பட்டன.

1950 களிலிருந்து யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிப்பிரச்சினையைக் குறைக்க அரசியல் கட்சிகளாலும் , சாதி எதிர்ப்பு அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் குறிப்பிடத்தக்க நல்ல பயன்களைத் தரவில்லை.

1980 களில் சாதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களினால் ,பாதிக்கப்பட்டிருந்த சாதிப் பிரிவினர் சமூக -பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி காணவும் தங்களது பிள் ளை களின் கல்வியில் கரிசனை கொள்ளவும் ஆரம்பித்தார்கள். இதுவரை காலமும் குறைந்த வகுப்புக் கல்வியுடன். படிப்பை நிறுத்திய பெண் பிள்ளைகள் இடைநிலைக் கல்வியை தொடர் ந்தனர். பெண் கல்வியால் பாதிக்கப்பட்டிருந்த மக்களிடையே சமூக முன்னேற்றம் ஏற்பட் டதுடன்மேலும் முன்னேற வேண்டுமென்ற பண்பு அதிகரித்தது. பாதிக்கப்பட்டிருந்த சமூகத்தின் இளைய பிரிவினர் சமூகத்தின் ஏனைய பிரிவினருடன் சமத்துவம்,சகோதரத்துவம் , சுதந்திர செயற்பாடுகளை முன்னெடுத்தனர். தங்களுக்கு ஏற்பட்டிருந்த கறையை நீக்க முயன்றனர்.

யாழ்ப்பாணத்தில் 1980 களில் ஏற்பட்ட மாற்றங்கள்இவர்களது சமூக அந்தஸ்தை மாற்றியது. 1980 களில் இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கையாலும் ,யாழ்ப்பாணத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலையாலும் இச் சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர்கள் , மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர். வெளிநாடு சென்ற வர்கள் தங்களது குடும்ப நிதி மூலதனத்தை வளர்த்த தெடுத்தனர். நிலவளம் இல்லாத சமூகமாக இருந்த பிரிவினர் முதல் முறை நிதிவளம் பெற்றவர்களாக மாறத் தொடங்கினர்.

இதன் வழியாக மனித வளம் குறிப்பாக பெண்கள் ,இளம் பெண்கள் வலுவூட்டம் பெற்றனர். இளம்பெண்கள் கல்வியில்முன்னேறத் தொடங்கி, குறிப்பிடத்தக்க தொகையினர் பல்கலைக்கழகம் சென்று பின்னர் ஆசிரியைகளாகவும் ,பல அரச திணைக்களங்களில் பணியாளர்களாகவும் நியமனம் பெற்றனர். சாதிப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்த பெண்களின் வாழ்வில் பெரிய முன்னேற்றம் காணப்பட்டது.

**பெண் கல்வியின் வளர்ச்சி**

யாழ்ப்பாண சமூகத்தில் பொதுவாக கல்வியில் பெண் பிள்ளைகள் பின்நிற்கின்றனர். எனினும் ,கடந்த தசாப்தத்தில் பெண் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எட்டப்பட்டது. இன்று பாடசாலைகளில் மேல்வகுப்புக்களில் ஆண் பிள்ளைகளிலும் பார்க்க பெண் பிள்ளைகளே கூடுதலாகக் கற்கின்றனர். 2006 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 625 மாணவ,மாணவிகள் கல்வி கற்றனர்.இவர்களுள்69 ஆயிரத்து 509 பேர் ஆண்கள்,69ஆயிரத்து 116 பேர் பெண்கள். தரம் 11 இல் 7 ஆயிரத்து 257 மாணவர்களும் , 7ஆயிரத்து 567 மாணவிக ளும் இருந்தனர். தரம் 12 இல் 2 ஆயிரத்து 553 மாணவர்களும் , 3ஆயிரத்து 268 மாணவிகளும் இருந்தனர். தரம் 13 இல் 2 ஆயிரத்து 885 மாணவர்களும் , 4ஆயிரத்து 331 மாணவிகளும் இருந்தனர்.

தொகுத்து நோக்குகையில், மேல் வகுப்புக்களில் ஆண்களிலும் பார்க்க பெண்கள் அதிகமாகக் கற்பது தெரிய வருகின்றது. கீழ் வகுப்புக்களில் ஆண்கள்சிறு எண்ணிக்கையில் பெண்களிலும் பார்க்ககூடுதலாக இருப்பதற்குக்காரணம் குடிசனத் தொகையில் ஆண்கள் சற்று கூடுதலாக இருப்பதேயாகும்.

இன்று மாவட்டத்தில் 8ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள்கடமை புரிகின்றார்கள். இவர்களுள் பெரும்பான்மையினர் பெண் ஆசிரியைகள். ஆண்பிள்ளைகள் மட்டும் படிக்கும் பெரிய பாடசாலைகளிலும் கூடிய எண்ணிக்கையில் பெண் ஆசிரியைகள் கடமை புரிகின்றார்கள்.

கல்வி போதனையிலும் , கல்வி நிர்வாகத்திலும் பெண்களே மிகக் கூடுதலாக கடமை புரிகின்றனர். சில தசாப்தங்களுக்கு முன்னர் பெண்கள் விகிதம் மிகவும் குறைவாகஇருந்தது குறிப்பிடத்தக்கது.

இன்று முன்பள்ளி, ஆரம்பப் பள்ளி செயற்பாட்டை பெண்ணாசிரியர்களே முழு மையாக கையாளுகின்றனர். அடுத்து யாழ் ப்பாண பல்கலைக்கழகத்தில் மாணவரி டையே பால் விகிதாசாரம் எப்படி இருக்கின்ற தென நோக்குவோம்.அட்டவணை:1 2006/2007 கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில் கல்வி கற் கும் மாணவர்களின் எண்ணிக்கை பீட ரீதியாகவும் பால் ரீதியாகவும் பின்வருமாறு,

தொகுத்து நோக்கும் பொழுது மொத்த பல்கலைக்கழக மாணவர் தொகையில் பெண்கள் 65%மாகவும் (2556) ,ஆண்கள்39.5% மாகவும் (1670) இருக்கின்றார்கள். இப் புள்ளி விபரங்கள் பெண்கள்உயர் கல்வியில் பெற்றுள்ள முன் னேற்றத்தைக் காட்டுகி ன்றன. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் சிறு எண்ணிக்கையை விட முழுப் பேரும் வட மாகாணத்தை சேர்ந்தவர்கள்.இவர்களில் கூடுதலான எண்ணிக்கையினர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம்,பேராதனை பல் கலைக் கழகங்களின் வெளிவாரிப் படிப் புகளிலும், பெண்களே கூடுதலாகப் பதிந்துள் ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 245 நிரந்தர விரிவுரையாளர்கள் இருக்கின்றார்கள் (சிரேஷ்ட பேராசிரியரில் இருந்து தகுதி காண் விரிவுரையாளர்கள் வரை). இவர்களுள் ஆண்கள் 141 ,பெண்கள் 104 .கடந்த 10 ஆண் டுகளில் நியமிக்கப்பட்ட விரிவுரையாளர்களில் பெண்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையைப் பெற்றுள்ளனர்.பெண் விரிவுரையாளர்களின்

**அட்டவணை :1**

| பீடம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| விவசாயம் | 98 | 161 | 259 |
| சித்த வைத்தியம் | 50 | 51 | 101 |
| கலைப்பீடம் | 486 | 1101 | 1587 |
| கலைப்பீடம்(சட்டம்) | 14 | 30 | 44 |
| கலைப்பீடம்(இராமநாதன் நுண்கலைப்பீடம்) | 126 | 457 | 583 |
| முகாமைத்துவம் | 245 | 247 | 492 |
| வர்த்தகம் | 60 | 56 | 116 |
| விஞ்ஞானம் | 299 | 211 | 510 |
| விஞ்ஞானம்(கணனி விஞ்ஞானம்) | 07 | 06 | 13 |
| மருத்துவம் | 274 | 224 | 498 |
| இணை மருத்துவம் | 11 | 12 | 23 |
| | 1670 | 2556 | 4226 |

எண்ணிக்கை பெண்கள் உயர் கல்வியில் பெற்றசாதனையைக் காட்டுகின்றது. ஓய்வு பெறுபவர்களில் ஆண்கள் கூடுதலாக இருக்க புதிய நியமனம் பெறுபவர்களில் பெண்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையாக இருப்பதால் பெண் விரிவுரையாளர்களின் விகிதம் வருங் காலத்தில் அதிகரிக்கும் வாய்ப்பு கூடுதலாக இருக்கின்றது.

**பெண்கள் தலைமைத்துவம்**

பல்கலைக்கழகத்தில்(வவுனியா வளாகம் உட்பட) எட்டு பீடங்கள் இருக்கின்றன. பீடாதிபதிகளுள் இருவர் பெண்களாகும்.இதே போல் நூலகம், சித்த வைத்தியம், ஆங்கிலமொழி கற்கை மையம் உட்பட 47 கல்வி சார் துறைகள் இருக்கின்றன.

இத் துறை தலைமைத்துவத்தில் 23 துறைகளுக்கு பெண்கள் தலைமை தாங்குகின்றார்கள். கல்வி சார் நிர்வாகத்தில் பெண்கள் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றனர்.

கல்வி சாரா ஊழியர்கள் 471பேர் இருக்கின்றார்கள். இவர்களுள் 71 பேர் பெண்கள். சிற்றூழியர்கள் 208 பேர் இருக்கின் றார்கள். இவர்களுள் 204 பேர் ஆண்கள். நால்வர் மாத்திரமே பெண்கள். பாதுகாப்பு ஊழியர்கள் 49 பேரும் ஆண்கள். கல்வி சாரா ஊழியர்களில் பெண்களின் விகிதம் குறைவாக இருக்கின்றது. இது பாரம்பரிய பால்நிலை தொழில் பிரிவு பண்பில் மாற்றம் ஏற்படாது இருக்கும் நிலையைக் காட்டுகின்றது. தொகுத்து நோக்குகையில் பாடசாலை கல்வியிலும், பல்கலைக்கழக கல் வியிலும் ஆசிரியர் ,விரிவுரையாளர்கள் பணிகளிலும் பெண்கள் கடந்த சில வருடங் களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந் துள்ளார் கள். இது பெண் கல்வியை முன்னெடுத்த முன் னோடிகளுக்கு மன நிறைவுதரும் அறுவடையாகும்.

**அரச சேவையில் பெண்களின் பங்களிப்பு**

யாழ். மாவட்டத்தில் அரச சேவையில் பெண்களின் பங்களிப்பு துரித முன்னேற்றம் கண்டுள்ளது. மாவட்டத்தின் 15பிரதேச /உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மூன்று பிரதேச செயலாளர்கள் பெண்களாக இருக்கின்றார்கள். பிரதேச கணக்காளர்களாகவும் , பிரதி பிரதேச செயலாளர்களாகவும் உதவி திட்டமிடல்பணிப்பாளர்களாகவும் பல பெண்கள் கடமை புரிகின்றனர்.மாவட்டத்தின் பிரதான மிருக வைத்தியஅதிகாரி , பிரதி உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதான சுற்றுச் சூழல் அதிகாரி,மாவட்ட பிரதி பதிவாளர் நாயகம், பிரதான கட்டட பொறியியலாளர் போன்ற நிர்வாகப் பதவிகளை பெண்கள் வகிக்கின்றனர்.

மேலும் பெரும் எண் ணிக்கையில் மருத்துவர்கள் மற்றும் பெண் பொறி யியலாளர்கள் மாவட்டத்திலிருந்து உருவாகியுள் ளனர். இலங்கை நிர்வாக சேவை , திட்டமிடல் சேவை. கல்விச் சேவையூடாக பலபெண்கள்உயர் அதிகாரிகளாகக் கடமை புரி கின்றனர்.

அண்மையில் அரசு பெரும் எண்ணிக்கையான பட்டதாரிகளை பல திணைக்களங்களுக்கு நியமித்தது. முகாமைத்துவ உதவியாளர்கள் மத்தியிலும் கூடுதலான பெண்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச நிர்வாகத்தில் பெண்களின் பங்களிப்பு ஆண்களின் பங்களிப்புக்கு கிட்டியுள்ளதெனலாம். இது போலவே வங்கிகளிலும் பெண்ஊழியர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்துக் கொண்டு போகி ன்றது. சிற்றூழியர்கள் , வாகனச்சாரதிகள், பாதுகாப்பு உத்தி யோகத்தர்கள் போன்ற துறைகளில் தான் இன்றும் யாழ்ப்பாணப்பெண்கள் குறைவாக இருக்கின்றார்கள். பெண்களின் வளர்ச்சியை நோக்கும் பொழுது பெண்கள் உயர் பதவிகளைப் பெறுவதற்கு முன்பிருந்த கண்ணாடித் தடை( glass ceiling)இப்பொழுது இல்லையெனக் கொள்ளலாம்.

தொகுத்து நோக்குகையில் 1975 இல் மெக்சிக்கோவில் நடைபெற்ற பெண்கள் மகாநாட்டின் பின்னர் மற்றைய மகா நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களாலும் , ஐக்கிய நாடுகள் சபை, தேசிய அரசுகள், சர்வதேச நிதி வழங்கும் முகவர்கள் ,சர்வதேச அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் , பல்வேறு பெண்கள் அமைப்புகள், உட்பட அமைப்புக் குழுக்களின் முயற்சிகளாலும், காட்டிய கரிசனையாலும் கடைப்பிடித்த, கடைப்பிடித்து வரும் கொள்கைகள், செயற்பாடுகளாலேயே பெண்கள் கடந்த மூன்று தசாப்தங்களில் குறிப் பிடத்தக்க முன்னேற்றத் தைக் கண்டுள்ளனர். யுத்த சூழ்நிலையிலும், யாழ்ப்பாணப் பெண்களின் ஒரு பிரிவினரின் முன்னேற்றம் திருப்தியைத் தரக் கூடியது. சர்வதேச, தேசிய , உள்ளூர் பெண்களின் நிலையை நோக்கு மிடத்து இன்றும் பல துறைகளில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளனர்.

மேலும் மகளிர் தின கொண்டாட்டம் பெண்கள் முன்னேற்றத்துக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தி, அபிவிருத்தியை முன்னெ டுக்க வழி சமைக்கும் என்பதில் ஐயமில்லை. (முற்றும்)

தீமைக்கு அடிபணிவதா என்ற நிலைவரும்போது பலாத்காரம் தோன்றுகிறது.

– ராஜாஜி

வலம்புரி

# இலங்கையில் தொடரும் இந்துமத நிந்தை

இலங்கையில் இந்துமதத்திற்கு இருக்கக் கூடிய மதிப்பு மரியாதை என்ன? என்று யாரேனும் கேட்பார்களாயின் சைகை மூலமாக பூச்சியம் என்று காட்டிவிடலாம்.

அந்தளவிற்கு இலங்கையில் இந்துமதம் புறந்தள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஆதாரங்கள் பலவற்றை முன் வைக்க முடியும் எனினும் வன்னிப் பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டிற்கு வந்த இந்துமத குருமாருக்கு நடக்கும் அநீதி இதற்கு நல்லதோர் சான்றாதாரமாகும்.

வன்னிப் பகுதியில் நடந்துவரும் யுத்தத்தை அடுத்து அந்தணச் சிவாச்சாரியர்கள் சிலர் தமது குடும்பத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றுள்ளனர். இதேபோல் கத்தோலிக்க மதகுருமாரும் சென்றனர்.

இவ்வாறு சென்ற அந்தணச் சிவாச்சாரியர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர்.

ஆனால் கத்தோலிக்கக் குருமார் தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இங்கு கத்தோலிக்க மதகுருமாரை இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைக்கவில்லை என நாம் குற்றஞ்சாட்டவில்லை.

உண்மையில் மதகுருமார் வணக்கத்துக்குரியவர்கள். அவர்கள் தங்கள் சமயக் கடமைகளை செய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும்.

அவ்வகையில் கத்தோலிக்கக் குருமாரை அவர்கள் விரும்பிய இடத்திற்குச் செல்ல அரசு அனுமதித்தமை கத்தோலிக்க மதத்திற்கு வழங்கிய மதிப்பாகும்.

அதேநேரம் மாமிசம் புசிக்காத –தினமும் சிவ பூசை செய்து அறம்காக்கின்ற அந்தணர்களை மட்டும் இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைப்பது எதற்காக?

இலங்கையில் அந்தணர்கள்தான் ஆயுதமேந்தி போராடினார்களா? அல்லது அங்குமிங்கும் மாறி அரசியல் பிழைப்பு நடத்தினார்களா? இல்லவே இல்லை.

தாமுண்டு தமது இறைபணியுண்டு என்றவாறு அரசியல் கலப்பற்று சமயப் பணியை மட்டும் அவர்கள் மேற்கொண்டார்கள்.

எந்த உயிர்க்கும் தீங்கிலா சிந்தைகொண்டு, புலாலை புறந்தள்ளி சைவபோசனம் உண்டு அறம்காக்கும் அந்தணர்கள்தான் எடுத்த எடுப்பில் சுடுவதற்கும் நினைத்தபாட்டில் இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைப்பதற்கும் ஆட்களெனில் இந்து மதம் இலங்கையில் நிந்தனைப் படுத்தப்படுகின்றது என்பதை எங்ஙனம் நிராகரிக்க முடியும்.

இந்த நியாயமான கேள்வியோடு இந்து மதத்தைக் காக்க அந்தணர்குலம் முன்வராத வரை –ஆலய பூசையும், ஆகம விதியும் தத்தம் குடும்பமுமே பெரும் சுகம் என்று இருக்கும் வரை இலங்கையில் இந்துமதம் உருப்படாது.

இந்தியாவைப்போல் சிவசேனை இந்தச் சிவபூமியிலும் தேவை. மரியாதையைக் கேட்டுப் பார்ப்பது, இல்லையேல் அத்வானிபோல் –பால் தாக்கரேப்போல் ஆமார் எடுத்து சைவ நீதியை உரைப்பது இவை எப்போது நடக்கும் இறைவா!

## லாகூர் தாக்குதல் விசாரணைக்கு

# இலங்கையின் ஒத்துழைப்பை பாகிஸ்தான் கோரியுள்ளது

பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் அணிவீரர்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு இலங்கையின் ஒத் துழைப்பை பாகிஸ்தான் அதிகாரிகள் கோரியிருப்பதாக இலங்கை வெளி விவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை இலக்குவைத்து இனந்தெரியாத ஆயுத்தாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர். இந்த சம்பவத்தில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் 7 பேர் காய மடைந்திருந்ததுடன், பாதுகாப்பு வழங்கச் சென்றிருந்த பாகிஸ்தான் பொலிஸார் 6பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் விரைவில் நடத்த வேண்டுமென இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ . பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசீப் அலி சர்தாரியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த நிலையில் விசாரணைக்கு இலங்கையின் ஒத்துழைப்பு வேண்டும் என பாகிஸ்தான் கோரிக்கை விடுத்திருப்பதாக ரோஹித்த போகொல்லாகம கூறியுள்ளார்.

லாகூரில் நடைபெற்ற சம்பவம் குறித்து இணைந்த விசாரணைகளுக்குத் தயாரில்லையெனவும் ,தேவைப்படும் சந்தர்ப்பத்தில் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இலங்கை வெளி விவகார அமைச்சர் பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு அறிவித்ததாக அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விசாரணைகள் ஆசியப்பிராந்தியத்திற்கும் அப்பால் சென்று வெளிநாட்டவர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென ரோஹித்த போகொல்லாகம சர்தாரியிடம் கோரிக்கை விடுத்திருந்ததாக தெரிய வருகிறது.

இதேவேளை,இலங்கை கிரிக்கெட் அணி மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கான உதவிகளை வழங்க அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் முன்வந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை வெளிவிவகார அமைச்சரைத் தொடர்பு கொண்ட ஆசியப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சட் பௌச்சர் ,லாகூர் தாக்குதல் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் கண்டறியப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

விசாரணைகளுக்கு உதவி வழங்க தாம் தயார் என பௌச்சர் போகொல்லாகமவிடம் கூறியதாகவும் அதேபோல் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்ரீபன் ஸ்மித் விசாரணைகளுக்கு உதவி வழங்க தமது நாடு தயார் என கூறியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசாரணைக்குழுவொன்றை அனுப்ப அரசாங்கம் தயாராக இருப்பதாக இலங்கை பாதுகாப்புப்பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

(5)

# தேசிய வாசிப்பு மாத பேச்சுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நூலக விழிப்புணர்வு நிறுவகம் யாழ்.மாநகர சபையுடன் இணைந்து நடத்தும்'தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சி 2008' இற்கான பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகளில் தரம் 10, 11, 12, 13 இற்கான பேச்சுப் போட்டிகள் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பொதுசன நூலகத்தில் நடை பெறவுள்ளது.

இப்போட்டிகள் தொடர்பான அறிவித்தல்கள் பாடசாலைகள் அனைத்திற்கும் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இப்போட்டிக்கு விண்ணப்பித்த யாழ்ப்பாண கல்வி வலயம்,.வலிகாமம் கல்வி வலயம் ஆகிய கல்வி வலய மாணவர்களை உரிய நேரத்திற்கு சமூகமளிக்குமாறு நூலக விழிப்புணர்வு நிறுவக செயலாளர் அறிவித்துள்ளார். (6)

# வவுனியா அகதி முகாம்களில் அம்மை நோய் பரவுகிறது

(கொழும்பு)

வவுனியா அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் அம்மை நோய் வேகமாக பரவி வருவதாக தெரியவருகிறது.

அம்மைநோயினால் பீடிக்கப்பட்ட 500ற்கும் அதிகமானோர் பூவரசங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பூவரசங்குளம் வைத்தியசாலை,மகப்பேற்று வைத்திய சாலையாகும். இங்கு ஒரு அறையில் பத்துப் பதினைந்து பேர் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.இங்கு போதிய வசதிகள் இல்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

வவுனியா அகதி முகாம்களில் போதிய தண்ணீர் வசதிகள் இல்லை எனவும் தண்ணீர் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதிக வெப்பம் அடர்த்தியாக மக்கள் தகரக்கொட்டில்களில் தங்கி இருப்பது போன்ற காரணங்களால் தொற்று நோய்கள் பரவக் கூடிய அபாயம் இருப்பதாக வைத்தியத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த 32ஆயிரத்து 337 பேர் வவுனியாவில் உள்ள பதின்மூன்று நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ள இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் அம்மை நோய் பரவி வருகின்றமை குறித்து வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

அகதி முகாம்களில் அம்மை நோய் பரவியது எனினும் தற்போது அந்த நோய் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. நோயாளர்களுக்கு தேவையான மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றார்.

(6)

# ஈழப்பிரச்சினை இருக்கும் வரை சீமான்கள் உருவாவதை தடுக்க முடியாது

## நடிகர் சத்தியராஜ் தெரிவிப்பு

(சென்னை)

ஈழப்பிரச்சினை இருக்கும் வரை சீமான்கள் உருவாவதை தடுக்க முடியாது என நடிகர் சத்யராஜ் கூறியுள்ளார்.

தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் தொடக்க விழா சென்னை கலைவாணர் அரங்கத் தில்–இடம் பெற்ற போது அவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எத்தனையோ போரட்டங்கள் நடத்தி ஏமாந்திருக்கும் சூழ்நிலையில் ஈழத் தமிழர்களுக்காக மாணவர்கள் ஒன்று சேர்ந்திருப்பது சிறிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்கள் மூலம் அரசியல் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் எப்பேர்ப்பட்ட பிரச்சினைக்குக் கூட தீர்வு ஏற்படும் என்பதை வரலாறு உணர்த்துகின்றது.

தேர்தல் வந்து விட்டதால் இனி வீடுவீடாக வந்து அரசியல்வாதிகள் நடிப்பதை பார்க்க முடியும். தமிழினம் பற்றிய உணர்வு உள்ளவர், அவர் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவனுக்கு வாக்களிப்போம்.

இயக்குநர் சீமானின் கைது நீடிக்கப்படும் வரை ஈழப்பிரச்சினை இருக்கும் வரை சீமான்கள் உருவாவதை தடுக்க முடியாது என்றார்.

(6)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

# சுதந்திரனாக இரு



முனிவர் விடுதலையை விரும்புகிறார். புலனின்பப் பொருட்கள் எல்லாம் வீண் என்பதும் சுக துக்கங்களுக்கு முடிவில்லை என்பதும் அவருக்குத் தெரியும். இந்த உலகத்துச் செல்வந்தர்களுள் எத்தனையோ பேர் பழைய இன்பங்களில் நிறைவின்றிப் புதுப்புது இன்பங்களைத் தேடித் திரிகின்றனர் ! எல்லா இன்பங்களும் பழையவை ஆகிவிடுகின்றன. அவர்களுக்குப் புது இன்பங்கள் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் அவர்கள் எவ்வளவு முட்டாள் தனமானவற்றைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லையா? இவையெல்லாம் ஒரு கணநேரம் நரம்புகளைத் தட்டி எழுப்புகின்றன. அவ்வளவுதான் இந்தக் கணநேர எழுச்சிக்குப் பின் தோன்றும் பிரதிச் செயல் எவ்வளவு துன்பம் தருவது!

மக்களின் பெரும்பாலானோர் ஆட்டுமந்தைகளே. முதலில் போகும் ஆடு குழியில் தவறி விழுந்துவிட்டால் தொடர்ந்து செல்லும் ஆடுகளும் அதுபோலவே குழியில் விழுந்து கழுத்தை முறித்துக்கொள்ளும். அது போலவே மக்களும் சமுதாயத்தில் முக்கியமான ஒருவன் என்ன செய்கிறானோ அதையே பின்பற்றுகிறார்கள்; தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அவர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை.

# முல்லைத்தீவிலிருந்து 09ஆம் கட்டமாக திருமலைக்கு கப்பலில் அழைத்துவரப்பட்ட நோயாளர்கள் விபரம்

(திருகோணமலை)

**முல்லைத்தீவிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினால் நோயாளர்கள் மற்றும காயமடைந்தவர்கள் உட்பட 406 பேர் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். கப்பலில் கொண்டுசெல்லப்பட்ட போது உயிரிழந்தவர்கள் மூவரின் விபரம் இணைக்கப்படவில்லை. கப்பலில் கொண்டுசெல்லப்பட்ட 403 பேரின் பெயர் விபரம் வருமாறு,**

ரி.மகேந்திரன் (வயது 52) , விஸ்வமடு, கே. சசிகலா (வயது 20) ,முள்ளியவளை ,ஏ.றோஸ்மலர் (வயது 48) ,மாத்தளன் ,ஏ.அபிஷன்(6மாதம்) , மாத்தளன், ஏ.நிக்ஷன்(வயது 7) ,மாத்தளன், எஸ். கோமதி (வயது31) , மாத்தளன், பி.சுப்பிரமணியம் (வயது64) ,வவுனியா, ஏ.பரஞ்சோதி (வயது30) , கிளிநொச்சி,எஸ்.யசோதா (வயது27) , அக்கராயன் குளம், எஸ்.யோகேஸ்வரி (வயது 52), கிளிநொச்சி ,எஸ்.கலைமாது (வயது 6) , வவுனியா.

எம்.வேலாயுதன்(வயது67) ,அல்லைப்பிட்டி, டபிள்யு.செல்வரட்ணம்(வயது50) , மாங்குளம், ஐ.மனோன்மணி (வயது85) , யாழ்ப்பாணம், ஏ.வசந்தகுமாரி (வயது57) ,கிளிநொச்சி,எஸ்.நிஷா (வயது10) ,மாத்தளன்,ஏ.செல்வருபன் (வயது33) , மாத்தளன் , எஸ்.லலிதாவேலி (வயது57) , வேலணை, ஏ.தெய்வானை (வயது 65) ,கல்முனை, ஜே.அனுஷாதேவி(வயது29) ,மாத்தளன், ஜெ.மதுசன் (வயது7) ,மாத்தளன் , ஏ.தயாபரி (வயது 39) , மன்னார், வி.சரஸ்வதி (வயது83) ,பொக்கனை.

திரேஸம்மா (வயது57) , வட்டக்கண்டல், ஏ.அன் ரனி அம்மா (வயது83) அடம்பன் ,விநாசித்தம்பி (வயது68) , பளை ,ஏ.சுபிரியல் (வயது7) , மன்னார் , வி.செல்லத்துரை (வயது 7) ,வவுனியா, டி.ராஜேஸ்வரி(வயது31) கிளிநொச்சி.

பி.சலானி (வயது 9) , கிளிநொச்சி, பி.நிருஜா (வயது2) , கிளிநொச்சி,பி.யாழினி (வயது 8) , கிளிநொச்சி , கே.சாவித்திரி (வயது30) , மாத்தளன், கே.சுஜிவன் (வயது 8) , மாத்தளன் , கே.வனிதா (வயது5) , மாத்தளன் ,கே.தனுசன் (வயது 2) , மாத்தளன் , எஸ்.மரகமூர்த்தி (வயது61) , சாவகச்சேரி, எஸ்.ராசன்(வயது28) ,மாத்தளன், வி.ராஜேந்திரம் (வயது78) , புதுக்குடியிருப்பு.

எஸ்.நிர் மலாதேவி(வயது30) , நாகர்கோவில், டி.லோரன்ஸ் (வயது36) , மத்தாளன், ஏ.வசந்தி (வயது31) ,மானிப்பாய், விஜய ரோகினி(வயது26) சுந்தபுரம், ஏ.விதூஷா (வயது 4) , மானிப்பாய் , ஏ.லக்சிகா (வயது 9) , மானிப்பாய் , ஏ.விதூசன் (9மாதம்) ,மானிப்பாய்,ரி.ரட்ணம்(வயது57) ,தொல்லிப்பளை, ரி.செல்வராஜா(வயது72) ,யாழ்ப்பாணம், ஜெ.நவஜேந்திரன் (வயது 1 1/2) ,பரந்தன், வி.இராஜேஸ்வரி(வயது19) , பரந்தன், எம்.ஜெயந்தன் (வயது 23) ,பரந்தன், பி.திருசனா (வயது45) ,விஸ்வமடு,எஸ்.சிவயோகம் (வயது 73) ,மாத்தளன், ஆர்.ஜசீமா (வயது 28) ,மாத்தளன்.

ஆர்.விதூஷா(வயது 2) மாத்தளன், குணசேகரன்(வயது28) ,நெடுங்கேணி, பி.தேவிசரோஜா (வயது63) ,புதுக்குடியிருப்பு ,கே.திருசெல்வராஜா (வயது 65) ,புதுக்குடியிருப்பு ,எஸ். செல்வராஜா (வயது58) ,கிளிநொச்சி,எஸ்.கமலம் (வயது70) ,வட்டக்கச்சி,ஆர்.நிரோஜன்(வயது14) ,சுந்தபுரம்.

எம்.மதுரினி(வயது 9) ,மாங்குளம், எம்.ஜெபசாந்தன்(8 மாதம்) , மாங்குளம், எம்.ரவீந்திரா (வயது19) ,மாங்குளம், எம்.ஜெப தர்சன்(வயது2) மாங்குளம், ஆர்.பத்மலதா (வயது31) , பொக்கனை, ஆர்.முத்தாச்சி(வயது 71),பொக்கனை, ஆர்.சுந்தவனம் (வயது 69) , கண்டாவளை.

ஐ.தெய்வானைப்பிள்ளை(வயது 68) , கண்டாவளை,எம்.அழகன்(வயது 69) ,ராமநாதபுரம்,ஆர். விஜரட்ணம் (வயது60)-நாகர்கோவில், எஸ்.நிரேதிகா (வயது2), நாகர் கோவில், கே.கிருஷ்ண பிள்ளை (வயது 62)பளை , கே.விவேகானந்தன்(வயது40) , பளை , கே.முனியம்மா(வயது76) , சுந்தபுரம், ஆர்.லக்ஷமி (வயது67) ,புதுக்குடியிருப்பு , ர.மயில்வாகனம் (வயது85) வவுனியா , ஏ.சந்தனம்(வயது69) , ஆண்டான்குளம் , ரி.சிவமலை (வயது70) , ஆண்டான் குளம், எஸ்.அழுதா (வயது33) பூநகரி.

எல்.மேரிலவனிதா (வயது13) , பூநகரி, எல்.டனிஸ்ரன் (வயது 9) , பூநகரி , எஸ்.ஜோதிகா (வயது 6) , பூநகரி, எஸ். விக்ஸ்ரன் (வயது10), அருந்தவமலர் (வயது46) , முள்ளியவளை, வி.சின்னாச்சி (வயது75) முள்ளியவளை , கே. பாமினி (வயது 28) , கற்சிலைமடு, கே.பானுஜன்(வயது4) கற்சிலை மடு, வை. சிவானு (வயது 74) முல்லைத்தீவு , ஏ.அனுஷா (வயது25) ,பரந்தன் , ஆர்.காந்தி கேசு (வயது67) , விஸ்வமடு,கே.யாழினி (வயது6) , பரந்தன், ஆர்.பூங்கோதை (வயது31) , வவுனியா, ஆர்.கீர்த்திகா (வயது 1) வவுனியா.

கீர்தனா (வயது5) , வவுனியா, கே. டிசானினி (வயது2 1/2) ,பரந்தன், ஆர். செல்வநாயகம் (வயது 50) ,ஒட்டுசுட்டான்,கே.கிஷோபன்(வயது 7) , பரந்தன், கலாமதி (வயது32), சாவகச்சேரி, இ.அபிராமி (வயது4),சாவகச்சேரி ,எஸ்.அமிர்தம் (வயது 84) , மாத்தளன்,எம்.இராமநாதன் (வயது71) , மாத்தளன், பி.தெய்வராணி (வயது78) கிளிநொச்சி,எஸ்.கந்தசாமி (வயது67),கணேசபுரம்,ரி.மீனாட்சி (வயது66) , பொக்கனை. ஏ.கிருஷ்ணமூர்த்தி (வயது55), மல்லாவி, எம்.தங்கன்(வயது59) ,யாழ்ப்பாணம், எம்.சின்னமணி (வயது70)யாழ்ப்பாண்ம், என்.அன்னமலர் (வயது65) மல்லாவி,ஆர்.தவராணி (வயது 61) , யாழ்ப்பாணம். எஸ்.இராதகிருஷ்ணன் (வயது 61) , யாழ்ப்பாணம் ,எஸ்.பிரதீபன் (வயது25) , முல்லைத்தீவு,எஸ்.கந்தையா (வயது70) , பரந்தன் ,ஆர் மல்லிகா (வயது34) , சுந்தரபுரம், வி.சண்முகலிங்கம் (வயது69) , பூநகரி, கே. கிருஷ்ணமூர்த்தி (வயது53), முள்ளியன்காடு.

எஸ்.அங்கம்மா (வயது76) , மாத்தளன்,எஸ். இராசமணி (வயது65) ,பூநகரி. எஸ்.ஏ.விமலநாதன் (வயது 39),இரணைப்பாலை.எஸ் .செல்வபாக்கியம் (வயது 74) .பரந்தன் . எஸ்.ரத்தினா (வயது 57) வவுனிக்குளம். எஸ்.தொம் மஸியா (வயது 67). ஆலங்குளம். வி.கிருஷ்ணபிள்ளை (வயது 70) . முள்ளியவளை.கே.தங்கம்மா (வயது69). முள்ளியவளை, வி.நாகராஜா(வயது 64). யாழ்ப்பாணம், எஸ்.சுப்பிரமணியம் (வயது70) வட்டக்கச்சி. எஸ்.ராஜலக்ஷமி(வயது63).பரந்தன். ரி.றோஸ்(வயது62) , கொய்யாத்தோட்டம்.ஆர்.ரவீந்திரன் (வயது 42), பொக்கனை,கலையரசி (4 மாதம்), வட்டக்கச்சி, நாகேஸ்வரி (வயது 23),வட்டக்கச்சி,திருபா (வயது2) வட்டக்கச்சி.

எம்.சிந்துஜன்(வயது23),மாத்தளன், என்.தவக்கொழுந்து (வயது62), புதுக்குடியிருப்பு ,எஸ்.கனகையா (வயது72), வவுனியா,ஆர்.பிரதீப் (வயது 13),பொக்கனை,எம்.மெக்டறி (வயது64) கொய்யாத்தோட்டம் , ஐ.செல்லம்மா (வயது63) தெல்லிப்பளை, என்.நவமணி (வயது70)மாத்தளன். ஆர்.சிறிரங்கன்(வயது90),விஸ்வமடு,ஜெ.ஜெ. றோய்ர்ஸ் (வயது 79),கிளிநொச்சி, பி.சிலியா (வயது65), கிளிநொச்சி, ரி.லக்சுமி (வயது67) , யாழ்ப்பாணம், ரி.திலுக்சன் (வயது9) புதுக்குடியிருப்பு, எம்.பத்மாவதி(வயது72), புதுக்குடியிருப்பு, ஜெ.பிலிப்பையா (வயது 69),கிளிநொச்சி,இருதயம் (வயது 80)அடம்பன்,எஸ்.நிருசா (வயது8),மாத்தளன்,கே. தமயந்தி(வயது29),பருத்தித்துறை

ஆர்.ஆர்த்திகா (4 நாள்),ஆர்.ஆர்த்தி (4 நாள்), கே. ஈஸ்வரதேவி (வயது62) பருத்தித்துறை, எஸ்.விணோதராஜ் (வயது 23),முல்லைத்தீவு, கே.தங்கராணி (வயது52), மல்லாவி, எஸ்.எம். சிவகுமார் (வயுது 45),கிளிநொச்சி,எஸ்.விதுசா (வயது6) கிளிநொச்சி , தெய்வானப் பிள்ளை (வயது62), அரியாலை,கேராசமணி (வயது75), உருத்திரபுரம், ஜெ.அருள்மதி(வயது32), மாத்தளன், எஸ்.ஜெயநந்தன்(வயது32) , மாத்தளன்.

ஜெ.கனிஸ்ரா (வயது10),மாத்தளன், ஜெ.கனிஸ்ரன் (வயது12) , மாத்தளன், ஜெ.கஜன் (வயது 2) , மாத்தளன்,எஸ்.ஜெயலச்சுமி (வயது45) , மாத்தளன், எஸ்.விஷ்ணு(வயது5), மாத்தளன், ஈ.சிவராசா (வயது67), முள்ளியவளை,ரி.அன்னலக்சுமி (வயது 66),யாழ்ப்பாணம்,எ.மேரி மெடரென்டா (வயது 60) ,மன்னார் , எஸ்.விஜயந்தி(வயது30) , கிளிநொச்சி, எஸ்.பிரவின் (வயது2), கிளிநொச்சி, கே.நாகராஜ் (வயது93) ,வட்டகச்சி, ஜனனி(வயது5), மாத்தளன், எஸ்.கமலாவதி(வயது 52) ,இரணைப்பாலை, என்.அருளம்மா (வயது 63) வவுனியா, செல்வராணி (வயது29), கிளிநொச்சி, வி.தாமோதரம் பிள்ளை (வயது 71),முள்ளியவளை,ஆர்.ரகதீஸ்வரி (வயது 32) யாழ்ப்பாண்ம்.

ஆர்.கஸ்மினி(வயது2 1/2) , யாழ்ப்பாணம், ஆர்.பிரவீன்குமார் (வயது5) யாழ்ப்பாணம்,ரி.சிவபாக்கியம்(வயது68),முள்ளியவளை, எஸ்.வேலாயுதம் (வயது69),மாத்தளன்,யு.ஜெயசுதா (வயது 32),மாத்தளன் ,யு.நளினி(வயது4) , மாத்தளன், இராமர்கிருஷ்ணப்பிள்ளை (வயது 60) , கிளிநொச்சி, எஸ்.மயில்வானம் (வயது70),முல்லைத்தீவு,விரிசித்தம்மா (வயது84),மன்னார் கே.பரமேஸ்வரி (வயது 66)குமுளமுனை,எஸ்.தம்பு (வயது 67) , கிளிநொச்சி, எம்.நேசம் (வயது69), தெல்லிப்பளை, எஸ்.வீரசிங்கம் (வயது72),பூநகரி.

வி.கந்தையா(வயது 70) , முல்லைத்தீவு, டபிள்யு -மனோன்மணி(வயது 59) பூநகரி,ஏ.நாகராஜ் (வயது68),பரந்தன்,கே. செல்லையா (வயது 70) , முல்லைத்தீவு,கே.சோமசுந்தாரம் (வயது 71),மாங்குளம் ,கே.சேதுப்பிள்ளை (வயது72), முல்லைத்தீவு கே. அன்னபூர்னேஸ்வரி(வயது 71),முள்ளியவளை,எஸ்.கணபதிப்பிள்ளை (வயது76) . முள்ளியவளை,வி.சிவசுப்பிரமணியம் (வயது72), முல்லைத்தீவு,ஏ.சீனியன் (வயது78) , யாழ்ப்பாணம்,ஏ.சீனியபவளம் (வயது73) , யாழ்ப்பாணம், கே. கலைவாணி (வயது30) ,முல்லைத்தீவு,கே. தெய்வானை (வயது69) , முல்லைத்தீவு, வி.கன்னையா (வயது70) ,இரணைப்பாலை, ஆர்.பிரணவன் (வயது11)முல்லைத்தீவு,ஆர்.நவநீதராணி (வயது 42) , முல்லைத்தீவு,ஐ.பிரதீஸன்(வயது 8) , முல்லைத்தீவு.

எஸ். கெளரி(வயது48), அக்ஷயா(வயது6), எஸ்.தேவதாஸ் நவரத்தினம் (வயது 59) , மாத்தாளன்,ஏ.சந்திரகுமார்(வயது50) மல்லாவி, எஸ்.சிவராசா (வயது55) ,ஒட்டுசுட்டான் சரோஜினி(வயது 53) , தம்பலகாமம் , கே.வீரசிங்கம் (வயது 70) ,துணுக்காய் , கே.மகேஸ்வரி (வயது71),துணுக்காய் , வி.சண்முகராஜா (வயது 69) பரந்தன் , எம்.தம்பிராஜா (வயது 80) , டயகம , எஸ்.சுதாகரன்(வயது 7) , மாத்தளன் , என் .ரத்னசிங்கம் (வயது76) , முல்லைத்தீவு,கே.ஈஸ்வரி(வயது 65),மந்துவில்,கே.கந்தையா (வயது77), முள்ளியவளை ,கே. மலர் (வயது 68), யாழ்ப்பாணம், எவ்.ஜெயபாலன்(வயது 52).யாழ்ப்பாணம், ஜெ.பிறேமா (வயது 48).யாழ்ப்பாணம், எஸ்.சுதர்சன்(வயது28). ஒட்டுசுட்டான்,திருபாகரி (வயது 20). முல்லைத்தீவு.வி.பரமேஸ்வரி (வயது 40) . முத்ஷதயன் கட்டு.ஏ.சிவபாக்கியம் (வயது71) . புதுக்குடியிருப்பு,ஏ.மீனாட்சி (வயது70) , கிளிநொச்சி.

கே. சிவஞானம் (வயது52) .பூநகரி, எம்.சிவமாவலகு (வயது 75).மாத்தளன்.என்.பாலசிங்கம் (வயது67).பொக்கனை.ஜெ.செல்லக்கண்மணி(வயது 53),யாழ்ப்பாணம்.எஸ்கந்தையா (வயது 70) , யாழ்ப்பாணம்,ஜெ.கனகம்மா (வயது69), மாத்தளன், ஆர்.கிருபாகரன்(வயது6),மாத்தளன்.ஆர். லக்சிகா (வயது8) மாத்தளன் ,எம்.நாச்சியார் (வயது 75), கிளிநொச்சி ,என்.சுப்பிரமணியம் (வயது 65).பரந்தன் ,எஸ்.தேவசிங்கம்(வயது 67).நெடுங்கேணி, ரி.கங்காதேவி(வயது·57),நெடுங்கேணி. பி.வெள்ளைச்சாமி(வயது 64), வவுனியா. எஸ்.தர்சினி (வயது 31),முள்ளியவளை.

வீரசிங்கம் (வயது 70), புதுக்குடியிருப்பு, என்.யோகமலர்(வயது 45), முள்ளியவளை, எஸ்.சியாம்(வயது 2),முள்ளிய வளை, எஸ்.ரவீந்திரன்(வயது 60), முள்ளியவளை, வி.சோதிலக்சுமி(வயது64),புதுக்குடியிருப்பு, வி.அன்ன லக்சுமி (வயது 74),புதுக்குடியிருப்பு, எஸ்.சின்னம்மா (வயது 74),மதுக்கரை,பி. சறோஜா (வயது52), மன்னார், என்.முனிச்சாமி(வயது 83),கிளிநொச்சி, பி.புரோஜினி(வயது17),கிளிநொச்சி, பி.ஜமுனா ராணி (வயது 58) , கிளிநொச்சி, ஆர்.செல்லம்மா(வயது 63),ஸ்கந்தபுரம், எஸ்.வள்ளியம்மா (வயது 65),ஸ்கந்தபுரம்,ஏ.கோணேஸ்வரி (வயது 65)ஸ்கந்தபுரம், ஐ.அருணாச்சலம்(வயது 72), மாத்தளன்,என் .திருநாவுக்கரசு(வயது 70).கிளிநொச்சி,எஸ்.சோமசுந்தரம்(வயது 71).புதுக்குடியிருப்பு,எஸ்.வி.இராஜேந்திரன்(வயது 75),கொக்குவில், ஆர்.இராஜலக்சுமி (வயது 72).கொக்குவில்,டி.சரஸ்வதி(வயது 30).மாத்தளன், குயிலினி (வயது7),டயஸ் (வயது 31) மாத்தளன், பி.கலைவேந்தன்(வயது4),கே.மணியம்(வயது 52) ,கிளிநொச்சி, எ.மங்கையற் கரசி(வயது67), அடம்பன், கே.மாணிக்கம்(வயது 66),யாழ்ப்பாணம், எஸ்.ராமச்சந்திரன்(வயது 62),யாழ்ப்பாணம்,இராசையா(வயது 74),கிளிநொச்சி, கே. சின்னத்துரை(வயது 75), கிளிநொச்சி, ரி.தாஸன்(வயது 25),புதுக்குடியிருப்பு,துள்ளியா(வயது7),மாத்தளன்.

கே.ரஞ்சிதமலர் (வயது 64),நீர்ப் புரம், கே.கனகரத்தினம்(வுயது 54),மாத்தளன், கே.கைலாயப்பிள்ளை (வயது 61),பூநகரி,கே. தனலக்சுமி(வயது 50),மங்குளம்,ஜெ.இந்திராணி (வயது 65),புதுக்குடியிருப்பு,கே.கெளதினி(வயது 33),முள்ளியவளை,கே.நந்துஷன் (வயது 1),முள்ளி யவளை, கே. ஜெயந்தா(வயது 36),புதுக்குடியிருப்பு ,எஸ். கோபிராஜ்.(வயது7),புதுக்குடியிருப்பு, எம்.குகன் (வயது 30),முல்லைத்தீவு,எஸ்.சிவநேசன்(வயது 43), கிளிநொச்சி, கண்மணிப்பிள்ளை(வயது 68),மல்லாவி,பி.கேதூஷன்(வயது 7) மல்லாவி, கே.புஸ்பராணி (வயது 74),மல்லாவி, எஸ்.நாகரத்தினம்(வயது86),பொக்கனை, டயானாக் கொலின் (வயது22),இரணைப்பாலை, சிந்துஜா(வயது 9),இரணைப் பாலை,சுந்தரம்(வயது 72) பரந்தன்.

கே.ரவி(வயது 15) ,மலையார் மடு,எஸ்.பரமலிங்கம்(வயது59),யாழ்ப்பாணம்,எஸ் ராசம்மா (வயது 68),உருத்திரபுரம்,எம். மாணிக்கம் (வயது 68),பொக்கனை, எஸ்.சிதம்பரம் (வயது75),பொக்கனை, ஏ.குஞ்சியம்மா (வயது 58),கிளிநொச்சி, கறுப்புசாமி (வயது 75) ,முரசுமோட்டை, எஸ்.ராசமணி (வயது 69),முரசுமோட்டை,கணசோதி(வயது 52),புளியங்குளம்,ஆர்.செல்லையா(வயது 68), தர்மபுரம்,ஆர்.விக்னராஜா(வயது 69),முள்ளியவளை,என்.செந்தூரன்(வயது 41),முள்ளியவளை,எல்.சிவனேஸ்வரியம்மா(வயது 63),காங்கேசன்துறை,ஏ.லோகேஸ்வரன்(வயது 67),காங்கேசன்துறை,கே.அன்னலக்சுமி(வயது 72),யாழ்ப்பாணம்,எம்.கந்தசாமி (வயது 76),காங்கேசன்துறை,ஆர்.சுகந்தினி(வயது 27),அடம்பன்,ஆர்.ரேகா (வயது 8),அடம்பன்,ஆர்.பிரதீபா(வயது 9),அடம்பன் ,ஆர்.பானுசன்(வயது4),அடம்பன்,கே.தங்கராஜா (வயது 54),பூநகரி,எஸ்.கனகசபை (வயது 62),மல்லாவி,.

ஆர்.தணிகாசலம்(வயது70),யாழப்;பாணம்,எம். மாரியப்பன்(வயது60), கொறேனா, கே.வேலாயுதம்பிள்ளை (வயது 62),முல்லைத்தீவு,ரி. சிரோன்மணி (வயது23),பேசாலை,ரி. சந்தோஷ் (வயது2),பேசாலை,கே.பூரணதேவி(வயது 39) முல்லைத்தீவு,மேனகாந் (வயது 11) முல்லைத்தீவு,எஸ்.புஸ்பராணி (வயது38),வவுனியா ,எஸ்.கலையரசன் (வயது 1),வவுனியா, எஸ்.யோ கம்மா (வயது 60).கிளிநொச்சி.சி.சாமூவேல்(வயது 78) ,அடம்பன். ஏ.சிறிகந்தராஜா(வயது69),கிளிநொச்சி.

எஸ்.வேலாயுதம்(வயது 60),நீர் வேலி.எஸ். சபரிமுத்து (வயது 77) ,வட்டகச்சி எஸ். ராஜ துரை (வயது 64) .ஸ்கந்தபுரம். எஸ். ராஜா(வயது 73).உருத்திரபுரம். எஸ்.சண்முகம் (வயது 79),சிவநகர், எஸ். மல்லிகாதேவி( வயது 71), சிவநகர் , எஸ் புவனேந்திரன் (வயது 38), வட்டக்கச்சி , பி. அரிகா (வயது 02) ,வட்டக்கச்சி ப.லொகிகா (வயது 4) ,வட்டக்கச்சி பி.பாமினி (வயது 36) ,கிளிநொச்சி .

ரி. சசிகலா (வயது 24) ,பொக்கனை ஆர் சரஸ்வதி (வயது 62) ,பொக்கனை , சகிலா (வயது1) .ரி.சுயாந்தினி( வயது 26) ,முள்ளி யவளை ரி. திருதிகா (வயது 3),குமுளமுனை ரி.திலக்சன்(வயது 4) ,குமுளமுனை , ஆர்.தமிழ் வேந்தினி (வயது 20) மயிலிட்டி. ஆர்.ரஜீபவன் (வயது 2) ,மயிலிட்டி, ஆர். சந்திரரூபகலா (வயது 58) ,கிளிநொச்சி ஆர்.ராமானுஜம் (வயது 58) கிளிநொச்சி எஸ். சபரிமுத்து (வயது 62), மடு கே. புவனேஸ்வரி (வயது 68), குமுளமுனைவை. ஜெயரூபன்(வயது 30) ,மல்லாவி ஆர்.ஜெயகலா( வயது 30) ,பளை ,முகிலன் (வயது 2), பளை, ஆர் .ராகுலன் (வயது 6), பளை ஆர்.கோகுலன்(வயது 8), பளை, எம். நீலகாந்தி (வயது 54), கிளிநொச்சி, ஜெய்தர்சினி(வயது 28),மல்லாவி, யதுர்சிகா (வயது 2) ,மல் லாவி, ஏ. சிவனானந்த ரூபி (வயது36) ,பொக்கனை எஸ்.லோஜிதன் (வயது 1), பொக் கனை,கே.செந்தமிழ்ச் செல்வன்(வயது 34) பொக்கனை.

எம்.ரவீந்திரன்(வயது 31) பளை, இராம லிங்கம் (வயது 76) வட்டக்கச்சி, ரி.பூமணி (வயது 90) யாழ்ப்பாணம்,பரமேஸ்வரி (வயது 75),உடையார்கட்டு, கே.ஜது(வயது 4) உடையார் கட்டு, கே. சுகந்தினி( வயது 27) மாத்தளன். கே. கோவலன்(வயது 2) மாத்தளன், கே.தமிழ்ச் செல்வி(வயது 2) மாத்தளன், எஸ். கோணேஸ் வரன் (வயது 35) கைவேலி. கே.ஜெயலக்ஷ்மி(வயது 62), கிளிநொச்சி, கோபால் பிள்ளை (வயது 70), உதயநகர், ஏ.தர்மன்(வயது 63). பூநகரி, பி. திலகவதி (வயது 66) ,கண்டாவளை, கே.தோமஸ் (வயது 60), சுன்னவெளி, எஸ்.அருணாகலன்(வயது 81), வடமராட்சி, வி.பாக்கியம் (வயது 73) ,ஆரியவெளி.

எம். வேலுவிநாயகம்(வயது 77) ஆரிய வெளி, எம். சின் னப்பிள்ளை( வயது 72), வெற்றிலைக் கேணி, கே.ஈஸ்வரன் (வயது 45) கண்டாவளை, எஸ்.சாவித்திரி(வயது 66) உடையார்கட்டு, ஏ.தேவகுமார்(வயது49) யாழ்ப்பாணம்), பி. கணபதிப் பிள்ளை (வயது 76) குமுளமுனை, ரி.மயில் வாகனம் (வயது 70 ) பூநகரி, வண. எஸ். ஏ.எல். பிஹறடோ(வயது 32) மன்னார், ஆர் . வள்ளியம்மா (வயது73), மாத்தளன்.

வண. எஸ். சத்யராஜா( வயது 34) மன்னார், வண.ஏ. ஆரோக்கியம் (வயது32), மன்னார், வண.பீட்டர் அருள் நாதன் (வயது61), மன்னார், எஸ். ஆறுமுகம்( வயது74), உடுப்பிட்டி, ஜி. தங்கப் பதுமை (வயது 47), புதுக்குடியிருப்பு, வி.சண்முகம்(வயது 73), பொக்கனை, ரி. தேவராணி(வயது 52), புதுக்குடியிருப்பு, என். துரைசிங்கம்(வயது 62). புதுக்குடியிருப்பு, பி. முரளி(வயது 32), மாத்தன். எம். திலக்ஷனா (வயது 2), மாத்தளன், யூட் நிசாந்தன்(வயது 12), மாத்தளன், யூட் ராஜினி(வயது 40) மாத்தளன், என். சின்ம்மா (வயது 77). மளிகைக்காடு, எம். திலுக்சி(வயது 4), யாழ்ப்பாணம். எம்.சசியா (வயது 28) யாழ்ப்பாணம்), எஸ். மீனாட்சி (வயது 76),கிளிநொச்சி, எஸ். திருப்பதி (வயது 65), யாழ்ப்பாணம்.

# டெண்டுல்கர் 'ரன்' மழை இந்திய அணி அபார வெற்றி



(கிறிஸ்சேர்ச்)

டெண்டுல்கரின் அதிரடி சதத்தின் மூலம் இந்திய அணி மூன்றாவது ஒருநாள்போட்டியில் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது-20,5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடு கின்றது.

இதில் இருபது-20 தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றதுடன் இரண்டாவது போட்டி முடிபின்றி ரத்தானது.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று கிறிஸ்ற்சேர்ச்சில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது.

இப் போட்டியில் நியூசிலாந்து அணியின் தலைவர் டானியல் விக்டோரி விளையாடாத நிலையில் பிரண்டன் மக்குலம் அணித்தலைவர் பொறுப்பை வகித்தார்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி டெண்டுல்கார்,யுவராஜின்அதிரடியில் 50 ஓவர்கள் நிறைவில் 4 விக் கெட்டுக்களை மாத்திரம் இழந்து 392 ஓட்டங்களை குவித்தது.

இதில் தனது 44ஆவது ஒருநாள் சதத்தையும் நியூசிலாந்து மண்ணில் முதலாவது சதத்தையும் பூர்த்திசெய்த சச்சின் டெண்டுல்கர் 133 பந்துகளில் (16 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 163 ஓட்டங்களை குவித்த நிலையில் தசைப்பிடிப்பு காரணமாக ஆட்டத்தை இடைநிறுத்தினார்.

மற்றும் யுவராஜ் சிங் 60 பந்துகளில் (10 பவுண்டரிகள்,6 சிக்ஸர்கள் அடங்கலாக) 87 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி 58 பந்துகளில் (5 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 68 ஓட்டங்களையும் ரெய்னா ஆட்டமிழக்காமல் 18 பந்துகளில் (5 சிக்ஸர்கள் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் விளாசினர்.

பந்துவீச்சில் மில்ஸ் 2 விக்கெட்டுக்களையும் புற்லர்,எலியோட் ஆகியோர்தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 393 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ரைடர், மக்குலம் ஜோடி போராடிய போதும் 45.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 334 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ரைடர் 80 பந்துகளில் (12 பவுண்டரிகள்,4 சிக்ஸர்கள் அடங்கலாக) 105 ஓட்டங்களையும் அணித்தலைவர் பிரண்டன் மக்குலம் 68 பந்துகளில் (6 பவுண்டரிகள்,3 சிக்ஸர்கள் அடங்கலாக) 54 ஓட்டங்களையும் செளத்தி 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான்,யுவராஜ் சிங்,ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார்,யூசுப்பதான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த சச்சின் டெண்டுல்கர், ஆட்டநாயகனாக தெரிவானார்.

**தவறிய சாதனை**

இப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 133 பந்துகளில் 163 ஓட்டங்களை குவித்தார்.

எனினும் கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்த்த சாதனையை முறியடிக்க டெண்டுல்கரால் முடியாமல் போனது.

சர்வதேச ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் முன்னாள் வீரர் சயிட் அன்வர் 194 ஓட்டங்களை எடுத்து அதிக ஓட்டங்களை எடுத்தவர் என்ற சாதனையை தன்வசம் வைத்துள்ளார்.

எனினும் இப் போட்டியில் டெண்டுல்கர் முறியடிப்பார் என எதிர்பார்த்தபோதும் தசைப்பிடிப்பால் அவரால் முடியவில்லை

## பெண்கள் உலக கிண்ணம்; நியூசிலாந்திடம் வீழ்ந்தது ஆஸி.

(சிட்னி)

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சார்பில் பெண்களுக்கான 9ஆவது உலககோப்பை கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடக்கிறது.

இதில் இந்தியா,இலங்கை, உள்ளிட்ட 8 பெண்கள் அணிகள் விளையாடு கின்றன. சிட்னியில் நேற்று நடந்த குழு-ஏ பிரிவு லீக் போட்டியில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா களத் தடுப்பை தேர்வு செய்தது. இதனடிப்படையில்முதலில் துடுப்பெடுத்தாடியநியூசிலாந்து பெண்கள் அணி 48 ஓவரில் 205 ஓட்டங்களை எடுத்து சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் அணித்தலைவர் ஹெய்டி டிபென் 57ஓட்டங்கள், சட்டாத்வெய்டி 38ஓட்டங்கள், பேட்ஸ் 29 ஓட்டங்கள், சாரா மெக்கிளாஷன் 29 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் எலிசி பெர்ரி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

எளிய இலக்கை நோக்கி பதில் எடுத்தாடிய அவுஸ்திரேலிய பெண்கள் அணி 33 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்களை எடுத்த போது மழை குறுக்கிட ஆட்டம் முடிபுக்கு வந்தது.

இதனையடுத்து டக் வேர்த் லூயிஸ் முறையில் நியூசிலாந்து அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதில் நிட்ஸ்செக் 27 ஓட்டங்கள்,அணித் தலைவர் ரோல்டன் 21 ஓட்டங்கள்,பீல்ட்ஸ் 26 ஓட்டங்களையும் எடுத்து ஓரளவு நம்பிக்கை அளித்தனர்.

நியூசிலாந்து சார்பில் கடே புல்போர் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

நியூகாஸ்டிலில் குழு-ஏ பிரிவில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் மேற்கிதியத்தீவுகள்,தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு அலிசியா சிமித் 46 ஓட்டங்களை எடுத்து கைகொடுத்தார். தென்னாபிரிக்க அணி 45.2 ஓவரில் 116 ஓட்டங்களுக்கு சுருண்டது. பந்துவீச்சில் ஸ்டாபனி டெய்லர் 4 விக்கெட்டை வீழ்த்தினார்.

எளிய இலக்கை விரட்டிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஷனல் டேலே 26 ஓட்டங்கள்,கோர்டெல் ஜாக் 19,ஓட்டங்களை எடுத்து நம்பிக்கை அளித்தனர். மேற்கிந்திய தீவுகள் அணி 48.4 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 117 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## வெற்றியை நோக்கி ஆஸி.

பிலிப்ஸ் ஹக்ஸின் சிறப்பான சதத்தின் மூலம் இரண்டாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 292 ஓட்டங்களை எடுத்து 506 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம்மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் 5 ஒருநாள் மற்றும் 2 இருபது -20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்று அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 6 ஆம் திகதி டர்பனில் ஆரம்பமாகியது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 352 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிலிப்ஸ் ஹக்ஸ் 115 ஓட்டங்களையும் ஹட்ரிச் 108 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 138 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து பொலோன் நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனினும் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் அவுஸ்திரேலிய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிபில் 3 விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் பிலிப்ஸ் ஹக்ஸ் ஆட்டமிழக்காமல் 136 ஓட்டங்களை எடுத்ததுடன் பொன்டிங் 81 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 2-வது இன்னிங்ஸில் 506 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னி லையிலுள்ள நிலையில் நான்காம்நாள்ஆட்டம்இன்றாகும்.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 28





பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 218 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக் களையுமிழந்து பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டது.

இதில் முரளிதரன் 16 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 15 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

இதன் மூலம் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 4 விக்கெட்டையிழந்து 193 ஓட்டங்களை எடுத்த நிலையில் 5ஆம் நாள் ஆட்டம் நிறைவடைய போட்டி சமனிலையில் முடிபடைந்தது.

இதனால் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் சமனிலையில் தொடர்ந்தது.

ஆண்டு ஒக்டோபர் 26ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை ஹராரேயில் நடைபெற்றது.

இப் போட்டியில் இலங்கை அணியில் முரளிதரன் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதுடன் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைய தொடர் சமனிலையானது.

தொடர்ந்து நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் முதலிரண்டு போட்டிகளிலும் முரளிதரன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதுடன் இலங்கை அணி முதலாவது போட்டியில் வெற்றி பெற்றதுடன் இரண்டாவது போட்டியில் தோல்வியடைந்தது.

இதனால் தீர்மான மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி 1994ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் திகதி ஹராரேயில் நடைபெற்றது. இப் போட்டியில் முரளிதரன் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 296 ஓட்டங்களை எடுத்தது.


பதிலுக்கு 50 ஓவர்களில் 297 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 105 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 191 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந் தது.

**பாலா**

இதன் மூலம் இலங்கை அணி ஒருநாள் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 21 ஓட்டங்களைக் கொடுத்து பிரைனை (0) ஆட்டமிழப்பு செய்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

(பயணிக்கும்)

## எண் விளையாட்டு-33




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



மாநகர சபை, யாழ்ப்பாணம்



## படையினரின் பின்னணி...

நீண்ட நேரம் கடந்த நிலையிலும் மீண்டும் திரும்பாததால் சந்தேகம் கொண்ட படைத் தரப்பை சேர்ந்த ஒருவர் அவரை தேடிச் சென்றார்.

அவர் கடற்கரையை அண்மித்த போது முதலில் சென்ற படைத்தரப்பைச் சேர்ந்தவர் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடக்க காணப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக படைத்தரப்பைச் சேர்ந்தவர் உடனடியாக தனது மேலதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினார்.

விடுதலைப் புலிகளின் சிறப்பு பயிற்சி பெற்ற அணிகள் கடல் வழியாக 55 ஆவது டிவிசன் படையணியின் பின்னணி நிலைகளுக்குள் ஊடுருவியதை 55 ஆவது டிவிசன் படையணியின் மூத்த அதிகாரிகள் அப்போது தான் உணர்ந்து கொண்டனர்.

மேலதிக படையினர் அப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காலை 10 மணியளவில் பற்றைக்குள் மறைந்திருந்த விடுதலைப்புலிகளின் பெண் உறுப்பினர் ஒருவரை அடையாளம் கண்ட படைத்தரப்பை சேர்ந்தவர். அவர் மீது தாக்குதலை மேற்கொண்டார். இத் தாக்குதலில் காயமடைந்த பெண் உறுப்பினர் சரணடைவதற்கான சைகைகளை காண்பித்தார்.

அதனைத் தொடர்ந்து படைத்தரப்பை சேர்ந்தவர் அவரை அண்மித்தபோது அந்தப் பெண் விடுதலைப் புலி உறுப்பினர் தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க வைத்ததினால் படைத்தரப்பை சேர்ந்தவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இத் தாக்குதலின்போது அவருடன் வந்திருந்த மற்றைய பெண் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் மீண்டும் இரண்டாம் நாள் அப்பகுதியில் தேடுதல்கள் நடத்தப்பட்ட போது, படையினரின் நான்கு பேரைக் கொண்ட கொமாண்டோ அணியொன்று விடுதலைப் புலிகளின் சிறப்பு அணிகள் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலுக்கு உள்ளாகியதில் மூன்று பேர் அந்த இடத்திலையே கொல்லப்பட,அக்குழுவினை வழிநடத்திய கோப்ரல் தர அதிகாரி தப்பிச் சென்று விட்டார்.

இதனிடையே அரச படையினருடனான மோதல்களின்போது கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் அணிகளிடம் இருந்து கைப் பற்றப்பட்ட பொருட்கள் படையினரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. அவர்கள் ஒன்றரை மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் மற்றும் ஆயுதங்களுடன் ஊடுருவியுள்ளனர்.

இதனை நோக்கும்போது விடுதலைப் புலிகளின் அணிகள் நீண்ட நாட்களுக்கு படையினரின் பின்னணி நிலைகளுக்குள் தங்கியிருந்து தாக்குதல்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது தெரிய வந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் இந்த அணிகள் சிறப்பு பயிற்சி பெற்றவர்கள் எனவும் படைத்தரப்பை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## 'இறுதி நடவடிக்கை'...

காயமடைந்துள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு செய்தி வெளியிட்டுள் ளது.

மோதல்களையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது புலி உறுப்பினர்களின் 58 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு கிழக்கு, வடகிழக்கு மற்றும் வடக்குப் போன்ற மும்முனைகளினூடாக படையினர் தமது தீவிர முன்நகர்வு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் தாமரைக்குளம், பாலமாத்தளன் மற்றும் புதுக்குடியிருப்பு வடக்குப் போன்ற பகுதிகளிலேயே இரு தரப்புக்குமிடையே மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன.

இதன்போது சுமார் 100 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மோதல்களின்போது புலிகளின் முக்கியஸ்தர்களான சூசை, பானு, மற்றும் லோரன்ஸ் போன்றவர்கள் நேரடியாக ஈடுபட்டுள்ளதாக அவர்களது தகவல் பரிமாற்றங்களின்போது தெரியவந்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை புதுக்குடியிருப்பின் முன்னணிப் பகுதியில் படையினரின் நான்கு டிவிசன்களின் மும்முனை முன்நகர்வுகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாக புலிகள் தரப்பை மேற்கோள்காட்டி இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இறுதி நடவடிக்கை என்ற பெயரில் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் பாரிய எடுப்பிலான முன்நகர்வுகளை படையினர் மும்முனைகளில் மேற்கொண்ட நிலையில் அவையாவும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளன என்றும் இதில் படைத்தரப்பில் நேற்று வரை 450 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஆயிரத்து272 பேர் காயமடைந்துள்ளதுடன் பெருமளவு படைக்கலங்களும் படையினரின் உடலங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கருணா...

தங்களை சார்ந்த சுமார் 3 ஆயிரம் பேர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் அவர்கள் உறுப்பினர்களாக அங்கத்துவம் பெறும் வரை ஆயுதங்களை வைத்திருப்போம் என்றும் அவர்களை சார்ந்த பேச்சாளரான தட்சணா மூர்த்தி கமலநாதன் தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல்கள் இருக்கும் போது ஆயுதங்களை கையளிக்க முடியாதுள்ளது. கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் செயல்படும் சில குழுக்களினால் இன்னும் அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. இதன் காரணமாகவே தற்போதைக்கு ஆயுதங்களை ஒப்படைக்கக் கூடிய சூழ்நிலை இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-5)


## மரண அறிவித்தல்

### முத்தாலிங்கம் பத்மாவதி

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தாலிங்கம் பத்மாவதி அவர்கள் 7.03.2009 அன்று மாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் நாராயணர் முத்தாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் பவளம், தங்கம்மா, வசந்தாதேவி, இராஜகுமாரி, சரோஜாதேவி, சீதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதந்திரபாலன் (பிரான்ஸ்),லலிதாராணி (இந்தியா), பூரணேஸ்வரி (இலண்டன்),மணிவண்ணன் (இந்தியா), மணிமாறன் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

சந்திரகுமாரி, ரவீந்திரன், சிவதாசன், கொலஸ்ரினா ஆகியோரின் மாமியாரும் சுஜீவன், சுகிர்தன், சதுசன், சரோன், ஸ்ரேயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (9.03.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் கிரியைக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து பிற்பகல் 4 மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கலட்டி வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

-குடும்பத்தினர்.

(C-2193)



## PENTIUM 4 COMPUTERS

1 Intel Mobile Processor
Intel Mother Board
80GB Sata Harddisk
512MB DDRII Ram
CD Writer
15" LCD Monitor
ATX Black Casing
KeyBoard
Optical Mouse
37,000/=
Free: 1GB Pendrive Duestcover Mousepad

2 Intel 1.8Ghz Dualcore
Foxconn Motherboard
80GB Sata Harddisk
1GB DDRII Ram
Dvd Writer
17" LCD Monitor
ATX Black Casing
KeyBoard
OpticalMouse
45,000/=
Free: 1GB Pendrive Duestcover Mousepad

3 Intel 2.2Ghz Dualcore
Foxconn Motherboard
160GB Sata Harddisk
1GB DDRII Ram
Samsung DvdWriter
17" LCD Monitor
ATX HandleCasing
Keyboard
Optical Mouse
UPS 650W
53,000/=
Free: 2GB Pendrive Duestcover Mousepad

4 Intel 2.2Ghz Dualcore
Intel DG31 Motherboard
160GB Sata Hartdisk
1GB DDRII Ram
Samsung DvdWriter
19" LCD Monitor
ATX HandleCasing
Keyboard
Optical Mouse
UPS 650W
57,500/=
Free: 2GB Pendrive Duestcover Mousepad

5 Intel 2.2Ghz Dualcore
Intel DG31 Motherboard
250GB Sata Harddisk
2GB DDRII Ram
Sony Dvd Writer
19" LCD Monitor
ATX Handle Casing
Keyboard
Optical Mouse
UPS 650W
61,000/=
Free: 4GB Pendrive Duestcover Mousepad

6 Intel 2.8Ghz Core2Duo
Intel DG31 Motherboard
250GB Sata Harddisk
2GB DDRII Ram
Sony Dvd Writer
19" LCD Monitor
ATX Candle Casing
Keyboard
Optical Mouse
UPS 650W
67,500/=
Free: 4GB Pendrive Duestcover Mousepad

1-2 Years Warrenty
Vaild For One Week

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான...

நாளை அல்லது நாளை மறுதினம் இந்த லொறிகள் கொழும்பில் இருந்து நேரடியாக யாழ்ப்பாணம் செல்ல விருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திவாரட்ண இது குறித்து மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தேவையான பொருட்கள் வாரா வாரம் லொறிகள் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதற்காக வெலிசறையில் பாரிய களஞ்சியசாலை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. வெலிசறையில் பொருட்கள் ஏற்றிச் செல்லும் லொறிகளுக்கு சீல் வைக்கப்படும். இந்த லொறிகள் எந்தப் பாதுகாப்புச் சோதனைச்சாவடியிலும் நிறுத்தப்படமாட்டது. லொறிகளும் சோதனையிடப்பட மாட்டாது.

வெலிசறையில் இருந்து செல்லும் லொறிகளும் பொருட்களும் யாழ். அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்படும். அவை பின்னர் வர்த்தக சங்கத்திடம் ஒப்படைக்கப்படும். அதேபோல் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறிப்பாக வெங்காயம், புகையிலை போன்றவை கொழும்புக்குக் கொண்டு வரப்படும்.

தனியார் லொறிகள் பொருட்களை கொண்டு செல்ல விரும்பினால் வெலிசறையில் தமது லொறிகளை அவற்றின் உரிமையாளர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் தமது பொருட்களை அனுப்ப முடியும். உரியவர்கள் அப்பொருட்களை வெலிசறை களஞ்சியசாலையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த நடவடிக்கையின் மூலம் யாழ். குடா நாட்டில் பொருட்களின் விலை கணிசமான அளவில் குறைவதுடன் யாழ். உற்பத்தி பொருட்களை தென்பகுதி மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிதாக இருக்கும் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இன்று ஏ-9 பாதையூடாக 35 லொறிகளில் அத்தியாவசியப் பொருட்கள் எடுத்து வரப்படவுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் யாழ். அரச அதிபரிடம் கேட்டபோது,

ஏ-9 பாதையூடாக அத்தியாவசிய பொருட்கள் 35 லொறிகளில் எடுத்துவரப்படுவது குறித்து இன்று காலையே தமக்கு தகவல் கிடைக்குமெனக் குறிப்பிட்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ், முதல் கட்டமாக உலக உணவுத் திட்ட நிவாரணப் பொருட்களே எடுத்து வரப்படுமெனக் குறிப்பிட்டார்.

அத்துடன் தனியார் துறைக்கான பொருட்கள் எடுத்து வரப்படுவது குறித்து தமக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடமிருந்து தமக்கு எதுவித அறிவிப்புகளும் கிடைக்கவில்லை எனவும் யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாண விவசாயிகளின் உற்பத்திப்பொருட்களை எதிர்வரும் காலங்களில் தென்னிலங்கைக்கு எடுத்துச் சென்று சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அனர்த்த நிவாரண மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண விவசாயிகளின் உற்பத்திகளை தென்னிலங்கையில் சந்தைப்படுத்துவதன் மூலம் அவர்களிற்கான பொருளாதார வளத்தினை மேம்படுத்த முடியுமென அவர் தெரிவித்துள்ளார். எனினும் இது தொடர்பில் யாழ். அரச அதிபரிடம் கேட்ட போது, குடாநாட்டு விவசாய உற்பத்திகளை தென்னிலங்கைக்கு அனுப்புவது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காகவிண்ணப்பித்துள்ளதாக வும் அது கிடைத்தவுடனேயே பதிலளிக்கமுடியும்என்று கூறினார். (ந-3,5,14)




IDM EDUCATIONS SERVICES (PVT) LIMITED.
(Member of IDM Group of Companies)
Jaffna Branch
Student Visa - UK

YOUR Trusted Partner in
Professional Educational Counseling for
100% VISA Success.

Our Universities - UK
University of Sunderland
University of Worcester
City of London College
University of Wolverhampton
York St John University
Prifysgol Cymru University of Wales
The University of Greenwich
London Metropolitan University

DIRECT TRANSFERS TO UNIVERSITIES AND COLLEGES IN UK

Fast Track Degree Program (Two Years)
After G.C.E O/L or A/L

DIRECT ENTRY to the Bsc (Hons) Final Year on Completion of EDEXCEL HND

M.Sc, MIT, MBA, MA Courses

யாழ் நகரில் இருந்தவாறே உங்கள் மேற்படிப்பிற்கான Student Visa ஒழுங்குகளை குறைந்த செலவில் இலகுவாக பெற்றுக் கொள்ள

இன்றே நாடுங்கள்...

IDM education Services

Head Office:
230, 4th Floor,
Galle Road,
Colombo 04.
Tel No: 0112583338

Jaffna Branch:
114, Navalar Road,
Jaffna.
Tel No: 021 2224142

(C-2193)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.